சைவ சமய வளர்ச்சி கருதிய
செய்தி தரும் மாத இதழ் - விக்கிரம ஆவணி

MONTHLY MAGAZINE OF
SAIVAISM AUG - SEP 2000

# சைவநீதி

# SAIVANEETHI




## காரைநகர் புளியங்குளம்
## அருளானந்தப் பிள்ளையார் கோவில்
## மகா கும்பாபிஷேகச் சிறப்பிதழ்
## 2000-04-19







உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

மலர் 4 விக்கிரம ஆவணி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ் 5

## துக்கம் தீர்வகை சொல்லுவன்

பல வகையான இன்னல்கள் அன்றாட வாழ்வில் இதனால் துக்கம் ஏற்படுகிறது. துக்கம் தீரும் வகைதான் என்ன? எதனால் ஏற்படுகிறது? என்பது பற்றிச் சிந்திக்கின்றோமா?

மேலும் மேலும் துன்பம் ஏற்படும் வண்ணம்தானே நடக்கிறோம். பொழுதைக் கழிக்கிறோம். இதை அப்பர் பெருமான் "பொக்கம் பேசிப்பொழுது கழியாதே" என்பார்.

பொய் பேசுதல், பிறர் குற்றம் பற்றிப் பேசுதல், தேவையற்றவற்றைப் பேசுதல் போன்றவற்றிலே பொழுது கழிகிறது. பொய் பேசுவதும் சாதாரணமாகவா பேசுகிறோம். "நாப்பிளக்கப் பொய்யுரைத்து" என்பார் பட்டினத்தடிகள். எம்மில் எத்தனையோ குறைகள், குற்றங்கள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் மறந்து, மறைத்துப் பிறர் செய்யும் குறைகளையும் குற்றங்களையும் பெரிதாக்கி எடுத்துப் பேசுகிறோம். இதனால் என்ன பயன்? நாம் எம்மை மாசுபடுத்துகின்றோம். எமது உடல் சுத்தமாக இருக்க வேண்டும் என்று நீராற் கழுவிச் சுத்தம் செய்கின்றோம். மனது சுத்தமாக இருக்க என்ன செய்யவேண்டும்? பொய் பேசாது இருக்க வேண்டும்.

*'புறத் தூய்மை நீரான் அமையும் – அகத்தூய்மை*
*வாய்மையாற் காணப்படும்"* என்பது வள்ளுவர் வாக்கு.

பொக்கம் என்பதற்கு வஞ்சகம் என்றும் பொருள். ஆகப் பொக்கம் பேசுதல், வஞ்சகமாகப் பேசுதல், பிறரை வஞ்சித்து அவர் மனம் துன்புறச் செய்வதால் அது திரும்பவும் எம்மை அடைந்து நாம் துன்புறுகிறோம். எமது நினைவு விரிவடைய வேண்டும். நான் மட்டும் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைப்பது தவறு. எல்லோரும் இன்பமாக இருக்க வேண்டும் என்ற நினைவு எப்போதும் எம் மனதில் இருக்க வேண்டும். எமது வழிபாட்டிலும் எமது நலனுக்கன்றிப் பிறர் நலனுக்காகவும் பிரார்த்திக்க வேண்டும். இயலுமானவரை பிறருக்குத் தேவையான உதவிகளையும் செய்ய வேண்டும்.

இம்மாத சைவநீதி "எண்ணிய பொருளெல்லாம் எளிதில் முற்றுற" அருள் புரியும் காரைநகர் புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் கோயிற் கும்பாபிஷேக மலராக மலர்கின்றது. பிள்ளையார் திருவருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

வீணாகப் பொழுதைக் கழியாது இறைவனை அடைந்து வழிபட்டுத் துக்கத்தைத் தீர்ப்போமாக.

*பொக்கம் பேசிப் பொழுது கழியாதே*
*துக்கந் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ*
*தக்கன் வேள்வி தகர்த்தழல் வண்ணன்*
*நக்கன் சேர் நல்ல நண்ணுதனன்மையே.*

உ

சிவமயம்

# சைவநீதி

## உள்ளே...........

1. துக்கம் தீர்வகை சொல்லுவன்
- ஆசிரியர் ........ 1

2. பொருளடக்கம் ........ 2

3. ஆசிச் செய்தி
- பிரம்ம ஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் ........ 3

4. காரைநகர் புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் ........ 4

5. ஆலய கும்பாபிஷேகங்கள்
- பண்டிதை செல்வி. யோகலக்ஷ்மி சோமசுந்தரம் ........ 6

6. சோடச கணபதிகள் ........ 8

7. ஸ்ரீ அருளானந்தப் பிள்ளையார் திருவூஞ்சல்
- வேலுப்பிள்ளை குமாரசுவாமி ........ 9

8. வாழ்த்துரை
- K. K. சுப்பிரமணியம் ........ 11

9. விநாயக சதுர்த்தி விரதம்
- செ. நவநீதகுமார் ........ 12

10. அருளானந்தப் பிள்ளையாரைத் தொழ ஆனந்த வாழ்வு மிகுத்து வரும்
- கம்பவாரிதி இ. ஜெயராஜ் ........ 16

11. சைவவினா விடை பஞ்சாகரவியல்
- ஆறுமுகநாவலர் ........ 18

12. நின்ற சீர் நெடுமாற நாயனார்
- சிவ. சண்முகவடிவேல் ........ 21

13. வள்ளுவத்தில் சித்தாந்தம்
- சிந்தாந்தரத்தினம் க. கணேசலிங்கம் ........ 22

14. மனத்துள் வைத்த திருப்பதிகம்
- முருக வே. பரமநாதன் ........ 25

15. சைவ நெறிப் பாடமும் பயிற்சியும்
- சாந்தையூரான் ........ 28

16. நினைவிற் கொள்வதற்கு ........ 30

திருக்குறள் : அதிகாரம் - 6 **(Tirukkural: Chapter - 6)**

சைவநீதி இதழில் வரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

*- இதழ் நிர்வாகிகள்.*

உ

கணபதி துணை

# காரைநகர் புளியங்குளம் அருளானந்த பிள்ளையார் கோவில் சம்புரோஷ்ண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக சமர்ப்பண ஆசிச்செய்தி



வானுலகும் மண்ணுலகும்வாழ மறை வாழ
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய்
யானை முகனை பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

பல சைவ சமய ஆலயங்களையும் புண்ணிய தீர்த்தங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் ஈழ வழநாட்டின் வடபால் அமைந்த காரைநகர் பதி விநாயகர், திண்ணபுரம் சிவன், அம்பாள், நடராஜப்பெருமான் திருக்கோயில், சுப்பிரமணியர் திருக்கோயில்களைத் தன்னகத்தே கொண்டது. சமயப்பெரியார்கள் சைவசமய கோட்பாடுகளை புரிந்து அதன் வழியில் வாழும் சைவசமய மக்களின் வழிபாட்டுத்தலங்களில் புராதனமாக விளங்கும் புளியங்குளம் என்னும் குளத்தின் அருகே மருது, வேம்பு, அரச விருட்சங்களின் நிழல் சூழ்ந்த பதியில் 200 ஆண்டுகட்கு மேலான காலத்தில் உருவாகிய ஸ்ரீ அருளானந்த விநாயகப்பெருமான் "வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்" என்ற பாடலுக்கமைய திருவருள் நிறைந்தவர். கடந்த வருடம் கார்த்திகை மாதம் திருப்பணி திருத்த வேலைகள் நடைபெற்று விக்கிரம வருஷம் சித்திரை மீ 7ம் திகதி (19.04.2000) புதன்கிழமை பிரதமைத் திதியில், சுவாதி நட்சத்திரத்தில் காலை 9.30 மணிமுதல் 10.40 மணிக்கு சுப முகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் மிகவும் பக்திப்பெருவிழாவாக கோலாகலமாக நடைபெற்றது. காரைநகர் வாழ் பக்தப்பெருமக்கள் அனைவரும் மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணசுத்தியுடன் ஆசாரசீலர்களாக ஆலயம் வந்து இறைபணிகளைச் செய்து வழிபட்டதைப் பார்த்தபோது அந்த ஊரே பக்திமயமாகக் காட்சியளித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இறைவன் திருக்கருணையுடன் சிறப்பாகவும் தெய்வீகத் தன்மையுடையதாகவும் மகிமை பொருந்திய நிகழ்வாகவும் நடைபெற்றது. "நம்பிக்கை உண்டேல் தும்பிக்கை துணை செய்யும்" என்ற அருள் வாக்குக்கு அமைய சகல ஆன்மகோடிகளுக்கும் இப்பெருவிழா பக்தி மயமாக நிறைவு பெற்றது. அருளானந்த விநாயகரது அருள் பிரவாகாரம் அனைத்துலக மக்களுக்கும் கிடைக்க வேண்டும். அத்துடன் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு தன்னை அர்ப்பணித்து மிகவும் குறுகிய கால இடைவெளியில் அளப்பெரிய ஆன்மிகப்பணி செய்த திரு. சண்முகநாதன் அவர்கட்கும் மற்றும் ஆலயத்தின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்த அனைத்து காரைநகர் வாழ் மக்களுக்கும் இம்மலரினை வெளியிடும் சைவநீதி மலரினருக்கும் வேழமுகத்து அருளானந்த விநாயகப்பெருமானின் பேரருள் சகலரும் பெறவேண்டுமென ஸ்ரீ அருளானந்த விநாயகப் பெருமானின் திருமலரடிகளைப் போற்றித் துதித்து வணங்கி எமது மனமார்ந்த ஆசிகளை அன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

சுபம்

23.07.2000
வெள்ளவத்தை
(நவாலியூர்) கொழும்பு 06.

*கும்பாபிஷேக பிரதமகுருக்கள்*
பிரம்ம ஸ்ரீ சாமி. விஸ்வநாதக் குருக்கள்
*பிரதிஷ்டாசிரோமணி*

# காரைநகர் புளியங்குளம் - அருளானந்தப் பிள்ளையார்

கோவிலும், குளமும் ஒருங்கமைந்து முன்னே மருதமரங்கள் பரந்து நிழல்தர வயல் சூழ்ந்த அழகிய கண்கவர் புண்ணிய தலமே காரைநகர் புளியங்குளம் - அருளானந்தப் பிள்ளையார் ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தத்தால் சிறப்புப் பெற்ற தலம்.

அந்நியர் ஆட்சியிலே ஆலயங்கள் கவனிப்பார் அற்ற நிலையிலும் அபிமானிகள் தம்சமய உணர்வை வெளிப்படுத்தத் தவறவில்லை. மரநிழல்கள் வழிபாட்டு இடங்களாக மாறின. மருதமரமும் வழிபாட்டு இடமாக மாறி அங்கே மக்கள் முழுமனதோடு வழிபாடு ஆற்றி வந்தனர். வயல் சூழ்ந்த கிராமம் ஆதலால் பொங்கல் பூசைகளுக்கும் குறைவில்லை.

இந்நிலையில் மக்களின் சமய உணர்வைப் பேணிப் பாதுகாக்கும் நல்ல நோக்குடன் அவ்வூர் சைவ வேளாண் குலதிலகமும், காரைநகர் மேற்கு விதானையார் என்று அழைக்கப்படும் பெரு மதிப்புக்கு உரியவரும் ஆகிய அமரர் பரமானந்த சண்முகம் அவர்கள் வெளிநாடுகளில் சென்று நிதி திரட்டி அவ்விடத்திலே ஆலயம் ஒன்றை சமயாசார முறைப்படி அமைப்பித்தார் அவ் ஆலயமே காரைநகர் புளியங்குளம் - அருளானந்தப் பிள்ளையார் என்ற பெயருடன் விளங்கும் ஆலயம்.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட அவ் ஆலயத்தின் இருமருங்கிலும் குளமும் கேணியும் உண்டு. முன்னர் குளமாக இருந்த குளத்தின் ஒரு பகுதி கேணியாகவும் மறுபகுதி கிணறுமாக விளங்க நடுவே ஆலயம் கட்டப்பட்டதாகவும் செவி வழியாக அறிந்தோம். விதானையார் பரமானந்தர் சண்முகம் அவர்கள் கோயிலை அமைத்ததுடன் நின்று விடாது நித்திய பூசைக்காக ஏராளமான வயல் நிலங்களையும், பனந்தோட்டத்தையும் குடியிருப்புக் காணிகளையும் நன்கொடையாக வழங்கியுள்ளார். அதனால் கோயிற் பூசைகள் எக்காலத்தும் முட்டின்றி நடந்தன.

வயல் சூழ்ந்த கிராமம் ஆதலால் நித்திய பூசைக்கு வேண்டிய அரிசி முதலியவற்றை அவ்வூர் மக்களே மனமுவந்து வழங்கினர். மக்களே முன்நின்று கோவிற்பணி புரிந்தனர். தினமும் இருவேளை காலை, மாலை பூசை தவறாது நடைபெற்று வந்ததுடன் சதுர்த்தி, பிள்ளையார் கதை, முதலியன மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் படுவதுடன் சுவாமி வீதி வலம் வரும் காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாகும். பக்தர்கள் புடைசூழ, வாத்திய கோசங்கள் முழங்க, பஜனைப் பாடல்கள் ஒலிக்க, பூக்கள் மாரிபோல சொரிய, பிள்ளையார் வீதி வலம் வருவார். பூந்தோட்டம் என்ற ஒன்று தனியாக இருப்பதுடன் கோயில் வீதியெங்கும் பூத்துக் குலுங்கியபடி மரங்கள் நிறைந்திருப்பதுடன் அல்லி, அறுகு ஆகியவற்றுக்கும் குறைவில்லை. ஆலயத்திலேயே நீர்த்தொட்டி அமைக்கப்பட்டு, அல்லி, ஆம்பல் ஆகியன வளர்க்கப்பட்டன. வன்னி, நெல்லி முதலிய மரங்களும் சூழ்ந்து அதாவது நீர்ப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ ஆகியன நிறைந்து இயற்கை அழகுடன் பொலிந்து விளங்கும் தலம் வன்னி மரத்திற்கு இன்றும் தீபம் காட்டி பூசை செய்யப்படுகிறது. வன்னி மரம் பழமையின் சின்னமாகப் போற்றப்படுகிறது.

*தீவிரமாயேனும் மந்தமாயேனும் நல்வினை இன்பத்தையும் தீவினை துன்பத்தையும் வருவிக்கும்.*

❖❖❖❖❖

*அதிக வருத்தத்தோடு உன்னைப் பெற்று வளர்த்த பிதா மாதாக்களை நீ என்ன வருத்தப்படினும் மறந்தும் கைவிடாமல் அன்போடு காப்பாற்று.*

பரமானந்தர் சண்முகம் அமரத்துவம் எய்திய பின்னர் அவரது பணியை அவரது மகனும் அவ்வூர் விதானையாரும் ஆகிய சண்முகம் பொன்னம்பலம் தொடர்ந்து பல வருடங்களாகச் செய்து வந்தார். அவரது காலத்தில் ஆலயம் மேலும் புதுமெருகு பெற்றது. ஆலயப் பணியில் தனது கவனத்தை முழுமையாகச் செலுத்தி பூந்தோட்டத்திற்கு நீர் இறைத்தும், குளத்தை வருடா வருடம் சுத்தப்படுத்தியும், நித்திய பூசைகள் நடைபெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொண்டும் வந்தார். காலையும், மாலையும் தவறாது கோயிற் தொண்டு செய்து நீராடி பூசை முடித்து வந்தே நித்தியக் கடமையில் ஈடுபட்டார். பிரதி வெள்ளிக் கிழமைகளிலும் சுவாமி வீதி வலம் வருவது நியதி. மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, விநாயகர் சஷ்டி, சதுர்த்தி போன்ற தினங்கள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் படுவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டு வந்தார்.

> தமையன் மனைவி, குருபத்தினி ஆகிய இவர்களைத் தம்மைப்பெற்ற தாயார்களாக மதித்தல் வேண்டும்.
>
> ❖❖❖❖❖
>
> பெண்களுக்கு உரிய தருமங்கள் எல்லாவற்றுள்ளும் முக்கிய தருமம் பதிவிரதம் ''குலமகட்கழகுதன் கொழுநனைப் பேணுதல் என்றார் பெரியோர்.

சண்முகம் பொன்னம்பலம் அமரத்துவம் எய்திய பின்னர் அவரது தம்பியும், இளைப்பாறிய அப்போதிக்கரியுமாகிய சண்முகம் நடராசா அவர்கள் அப்பணியைத் தொடர்ந்து தவறாது செய்து வந்தார். காலையும், மாலையும் பிள்ளையாரைத் தவறாது வழிபடும் நியமம் பூண்டவராய் ஒழுகி வந்தார். அளவிறந்த பக்தி உடையவர். மூப்பு எய்தி தளர்வடைய அவரது பணியை விதானை சண்முகம் பொன்னம்பலத்தின் மகனும் ஒய்வு பெற்ற நில அளவையாளருமாகிய பொன்னம்பலம் வேதாசலம் அவர்கள் தொடர்ந்து செய்து வந்தார். பிள்ளையார் விதானை குடும்பத்திற்குரிய குலதெய்வம் மட்டுமன்றி அப்பகுதி வாழ் மக்களுக்குமுரிய குல தெய்வம். எனவே எந்தவித வேறுபாடும் காட்டாது எல்லா மக்களும் ஒன்றாகக் கலந்து கோயிற் தொண்டு புரிந்தனர். கோயில் மேலும் பொலிவு பெற்றது. மாதப்பிறப்புப் பூசை, திருவெம்பாவைப் பூசை மங்கல வாத்தியம் முழங்க நடைபெற்றது. மார்கழி மாதம் முழுவதும் உஷக்காலப் பூசையும் இடம் பெற்றது. வருஷப் பிறப்புக் கருமம் மருத்துநீர் வழங்கும் பணி ஆகியன பல வருடங்களாகத் தொடர்ந்து இடம் பெற்றன.

இந்நிலையில் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தனர். எனினும் அங்கு நின்றவர்கள் கர்ப்பூரம் கொழுத்தியும் விளக்கு வைத்தும் வழிபாடு ஆற்றி வந்தனர். கோயிற் பூசைகள் இடம் பெறவில்லை. மரங்கள் செழித்து வேரோடிக் கட்டிடங்கள் பழுதுபட்டன.

இடம்பெயர்ந்து வேறுவேறு இடங்களில் குடிபெயர்ந்த நிலையிலும் பிள்ளையாரை யாரும் மறக்கவில்லை. பிள்ளையாரும் அடியார்கள் தன்னை மறக்க விடவுமில்லை. அடியார்கள் ஒன்றிணைந்து கோவில் புனருத்தாரணம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். இப்பணியில் பொறியியலாளர் தம்பையா சிவானந்தன், கிராம சேவகர் திருநாவுக்கரசு ஸ்ரீஸ்கந்தராசா பண்டிதன் ஆகியோர் முன்நின்று உழைத்தனர். தோன்றாத் துணையாயிருந்து அவர்களைத் தூண்டுவிக்க பொன்னம்பலம் பாலசுப்பிரமணியம், பொன்னம்பலம் வேதாசலம், அருளம்பலம் யோகேந்திரா, நமசிவாயம் பாலசண்முகம், அமரர் டாக்டர் பரமநாதன் பாலச்சந்திரா, நடராசா சண்முநாதன் ஆகியோர் முழு மூச்சாக எப்படியும் செய்து முடிக்க வேண்டிய பணி என்பதை உணர்ந்து விதானை குடும்பத்தவர்களாகிய ஆகியோர் ஒன்றிணைந்து அதற்கான நிதியைத் திரட்டி இப்பணி முட்டின்றி நிறைவேற வேண்டிய ஒழுங்குகளைச் செய்தனர். எல்லாம் வல்ல அருளானந்தப் பிள்ளையாரின் அருளால் நிதியும் வந்து குவிந்தது. பாலஸ்தாபனமும் முடிவுற்றது.

"நம்பிக்கைக்குத் தும்பிக்கை துணை"

19.04.2000 அன்று கும்பாபிஷேகமும் இனிதே நிறைவுற்றது.

# ஆலய கும்பாபிஷேகங்கள்

- பண்டிதை செல்வி யோகலக்ஷ்மி சோமசுந்தரம்

திருச்சிற்றம்பலம்

திருக்கோயிலில்லாத திருவிலூரும்
திருவெண்ணீ றணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பல தளிகளில்லாவூரும்
விருப்போடு வெண்சங்க மூதாவூரும்
விதானமும் வெண்கொடியு மில்லாவூரும்
அருப் போடு மலர்பறித்திட் டுண்ணாவூரும்
அவையெல்லா மூரல்ல வடவிகாடே

திருச்சிற்றம்பலம்

ஆன்மீகம் என்பது சட்டங்களோ சம்பிரதாயங்களோ, கிரியைகளோ, நம்பிக்கைகளோ அல்ல. உண்மையான நம்பிக்கையின் அடிப்படையில் சில கொள்கைகளை மனதளவில் ஏற்றுக்கொண்டு அந்த வழியில் நியதியோடு வாழ்வது தான் ஆன்மீகம். ஆன்மீக வழியிற் செல்லாத வாழ்க்கை முறையில் நின்று நிலைக்காது போன வரலாறுகளும் உண்டு. மனிதனைத் தூய்மைப்படுத்தி உலகியல் வாழ்க்கை செம்மைப்படுத்துவது ஆன்மீகமே இன்று நமக்குத் தேவைப்படுவதும் ஆன்மீக மறுமலர்ச்சி.

"அன்பர் பணிக்கென்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"

என்பது தாயுமானவர் வாக்கு

ஆன்மீக உணர்வுகளும் பண்பாடுமே துன்பமற்ற அமைதியான வாழ்வுக்கு வழிவகுக்கின்றது. மனிதகுலம் தன்னம்பிக்கையுடனும் குறிக் கோளுடனும் பொறுப்புணர்வுடனும் பரந்த பார்வையுடனும் செயற்படுவதற்கு அவனை ஒன்றுவிக்கின்ற ஒரு சக்தியே சமயம். மனித வாழ்வில் அமைதியையும் ஆனந்தத்தையும் நல்கக் கூடிய ஒழுக்க விழுமியங்களைக் கொண்டமைந்த சமயங்கள் தான் நல்லவை, தீயவற்றை அறிந்து மனிதனை வழி நடாத்துவிக்கும் பண்பாட்டின் தோற்றுவாய்கள். சமயமும் ஒழுக்கமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. இதனாலேயே இறைவழிபாடு உயிர்களுடன் இணைந்து விட்டது. இறைவழிபாட்டுக்குத் தோற்றுவாயாக ஆலயங்கள் அமைகின்றன. சைவர்கள் ஆன்மீக வழியே தெய்வீகவழி என்ற நம்பிக்கை மிக்கவர்கள். சமயக் கோட்பாடுகளும் ஆன்மீக வழிபாடுகளும் விருத்தியடைய ஆலய வழிபாடு அவசியம்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது சைவம் காட்டும் பண்டைய நெறிமுறை. இந்நெறிமுறையே ஆலயங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டன. ஆலயங்களில் ஆகம விதிப்படி நெறி தவறாத பூசை முறைகள் இடம்பெறுகின்ற போதும் திருவுருவங்களே வழிபாட்டுப் பலனைத் தரக் கூடியவை என்பது சைவர்களது நம்பிக்கை. பிரபஞ்சம் எங்கும் பரந்து விரிந்து நிற்கும் பரம்பொருளை மந்திரங்கள், பாவனைகள், கிரியைகள் மூலம் அக்கினியிலும், கும்பத்திலும் ஆவாகனம் செய்து திருவுருவத்திலே மூர்த்தியின் சக்தியை நிலை நிறுத்தி அதன்மூலம் ஆன்ம கோடிகளுக்கு அருள் செய்தலே மகா கும்பாபிஷேகத்தின் நோக்கம்.

கும்பாபிஷேகம்பல வகைப்பட்ட காலம் கொண்டதாக ஆலயங்களின் தகுதிக்கு ஏற்ப இடம்பெறும் கும்பாபிஷேகம் ஆவர்த்தனம், அநாவர்த்தனம், புனராவர்த்தனம் அந்தரிதம், எனப்பலகைப்படும். ஆவர்த்தனம் என்பது புதிதாக ஒரு மூலலிங்கத்தைப் பிரதிட்டை செய்தலாகும். அநாவர்த்தனம் என்பது கோயில்கட்டிப் பூசை இல்லாமல் சீர் குலைந்திருந்த ஆலயத்தைத் திருத்திக்

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை. 51
இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகித் தன் கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகின்றவளே வாழ்க்கைத்துணை ஆவாள்.

கும்பாபிஷேகம் செய்தலாகும். ஆலயங்களிலுள்ள கர்ப்பக்கிரகம், விமானம், கோபுரம் முதலியவைகளில் பழுது ஏற்பட்டாலும் அட்ட பந்தனத்தில் பழுது ஏற்பட்டாலும், விமான விக்கிரகங்களில் வர்ணம் அழிந்து பழுது நிகழ்ந்தாலும் செய்யப்படும் கிரியை புனராவர்த்தனம் ஆகும். காரைநகர் அருளானந்தப் பிள்ளையார் மூலஸ்தானத்தில் பிளவு ஏற்படு அட்டபந்தனம் யாவும் பழுதடைந்த நிலையில் செய்யப்பட்டதே சம்புரோஷண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் ஆகும்.

கணபதி பூசை வாஸ்து, சாந்தி, பாலஸ்தானம், நவாக்னி ஹோமம் முதலிய அறுபத்து நான்கு அங்க கிரியைகளைக் கொண்டது கும்பாபிஷேகம். "வானுலகும், மண்ணுலகும் வாழ ஞானமத ஐந்து கர மூன்றுவிழி நால்வாய் யானை முகனைப் பரவி அவருக்காகச் சித்திரைமாதம் 3ம் திகதி காரைநகர்ப் புளியங்குளம் பிள்ளையார் ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்டன. பிரணவ சொரூபியான விநாயகர் கிரியைகள் எல்லாம் சித்திக்கச் செய்பவர். "ஒரு நாமம், ஒருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டுவோம். சைவசமயிகள் விநாயகரை வழிபட்டே எக் கருமத்தையும் தொடங்குபவர்கள் ஆதலின் விநாயகர் வழிபாட்டில் அதிக நம்பிக்கை உடையவர்கள் அந்த விநாயகருக்காகச் செய்யப்படுகின்ற கும்பாபிஷேகம் அடியார்கள் உள்ளத்தை மகிழ்விக்கும். வாக்குக்கும் மனதிற்கும் எட்டுதற்கு அரியவனாகிய இறைவனை வழிபட்டுச் செய்யப்படுகின்ற கும்பாபிஷேகம் மூன்று பட்சத்திற்கு இடம்பெறும். ஒருபட்சம் பதினைந்து நாட்களைக் கொண்டது, எனவே நாற்பத்தைந்து நாட்களைக் கொண்டவபிஷேகம் மண்டலாஅபிஷேகம் எனப்படும். மூல மூர்த்தியை எழுந்தருளப்பண்ணி மண்டலாபிஷேகம் முடிய கும்பாபிஷேகம் பூர்த்தி அடையும். கற்பனை கடந்த இறைவனைக் கருணையே உருவாகும்படி மூல லிங்கத்தில் எழுந்தருளப்பண்ணிச் செய்கின்ற அபிஷேகமே கும்பாபிஷேகம். மூலமூர்த்தி புதுப்பொலிவு பெற்றுப் பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்வார் என்பதே இதன் நோக்கம்.

அனுஞ்ஞை முதல் மகா ஆசீர்வாதம் வரை கிரியைகள் இடம்பெறும். இவற்றின் வகைகள் தன்மை, பயன், விளக்கம் ஆகியன எம் அறிவிற்கு எட்டாததாயினும் இவற்றைச் செய்வதனால் ஆலயமும் கிராமமும் அவ்வூர் மக்களும் நலன் பெறுவர் என்பது நம்பிக்கை.

"ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே"

எனவே ஆலயக் கிரியைகளைச் செய்பவர்களும் அதற்கரிய பயனைப்பெற்றுக் கொள்வர் ஆலயங்கள் மனித உடலோடு தொடர்புபட்டவை.

"உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்"

என்பது திருமந்திரம். இவ்வாறு சைவமத வழிபாட்டில் ஆலயங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. எனினும் விநாயக வழிபாடு எளிமையானது. மரத்தடியிலும் குளக்கரையிலும் எழுந்தருளியிருப்பவர் விநாயகர். ஒரு மஞ்சளோடு அல்லது சாணத்தோடு அறுகுசேர்த்து அவரை வழிபடலாம். எனினும் அடியார்கள் தமது மனவிருப்பத்தை அவருக்கான ஆலயங்கள் அமைப்பதன் மூலம் பூர்த்தி செய்து கொள்கின்றனர். ஞான முதல்வனும் பிரணவ வடிவனும் ஆக விளங்குகின்ற விநாயருக்கு எண்ணற்ற ஆலயங்கள் நாடு பூராகவும் இருக்கின்றன. இவற்றை விட மகோற்சவச் சிறப்புக்களோ மாபெரும் கோயில் அமைப்புக்களோ இல்லாத ஆலயங்களும் பல உள்ளன.

இவ்வாறு பற்பல ஆலயங்கள் இருக்கின்ற போதும் ஆலயங்களில் கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் இடம்பெறுவது இன்றியமையாதது. இறைவன் பஞ்சபூதங்களின் வடிவமாகவும் அட்டமூர்த்திகளின் வடிவமாகவும் உள்ளான். யாகசாலை ஆகாய வெளிகளையும் காற்றையும் உள்ளடக்கியது. யாகசாலையில் அக்னி வளர்க்கப்படுகிறது. அத்துடன் கும்பங்களில் நீர் நிறைக்கப்பெற்று அபிஷேகம் செய்யப்படுகிறது. இக்கும்பங்களில் இறையருள் சக்தி ஆவாகனமாகிப் பின் அபிஷேகம் இடம் பெறுகிறது. கும்பம் உலோகம் அது பிருதுவி அம்சம். மண்ணோடு தொடர்புடையது

(தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க)

**She who has the excellence of home virtues, and can prudently expend the property of her husband, is a help in the domestic state. 51**

# சோடசகணபதிகள்

1. பால விக்னேச்வரர் – இவர், வாழை, மா, பலா, விளா, கரும்பு முதலிய கரத்தில் கொண்டவராய் ஒருமுகம் உள்ளவராய்ப் பாலசூரியப் பிரகாசமாய் விளங்குவார்.

2. தருணகணபதி – பாசம், அங்குசம், அபூபம், விளா, ஜம்பூபலம், எள், புள்ளாங்குழல் கையிலுடையவராய் ஒருமுகமுள்ளவராய் மகா பிரகாசமுள்ளவராய் விளங்குவார்.

3. பக்தவிக்னேசர் – தேங்காய், மா, வாழை, சருக்கரைப் பாயசம் தரித்தவராய் ஒருமுகமுள்ளவராய்ச் சரத்கால சந்திரனையொப்ப விளங்குவோர்.

4. வீரவிக்னேச்வரர்– வேதாளம், வேல், அம்பு, வில், கேடகம், கட்கம், கட் வாங்கம், கதை, அங்குசம், நாகபாசம் சூலம், குந்தம், பரசு, த்வஜம் தரித்தவராய்ச் சூரியப் பிரபைபோல் விளங்குபவர். இவர் கொண்ட ஆயுதங்களுக்குக் கொப்ப முகங்கள் கூறப்படவில்லை. ஒரு முகமே இருக்கலாம்.

5. சக்திணேசர்- தொடையில்தேவியைக் கொண்டவராய் அவளைத் தழுவினவராய் அந்திவண்ணராய் உள்ளவர்.

6. த்வஜகணாதிபர் – இவர் கோரமுகம், சதுர்ப்புஜம் புஸ்தகம், ருத்ராக்ஷம், தண்டம், கமண்டலம், உள்ளவராய்ப் பிரகாசமுள்ளவராய் இருப்பர்.

7. பிங்களகணபதி – இவர் மாம்பழம் ஒரு கரத்திலும், மற்றொரு கரத்தில் கல்ப மஞ்சரியும், பரசு முதலிய ஆயுதங்களைக் கொண்டவராய் யானைமுகத்துடன் தியானிக்கப்படுவர்.

8. உச்சிஷ்டகணபதி– இவர் தாமரை, மாதுளைக்கனி, வீணாசாலிபுச்சம், அக்ஷசூத்திரம், உடையவராய் யானைமுகத்துடன் தியானிக்கப்படுவர்

9. விக்கின ராஜகணபதி – இவர் பாசம், அங்குசம், மாம்பழம், கையிற் கொண்டவராய் இரத்தவர்ண முடையவராய் ஆகுவாகன ரூடராய்த் த்யானிக்கப்படுவார்.

10. க்ஷிப்பிர விநாயகர் – இவர் தந்தகல்பம், ரத்நகும்ப முடையவராய், யானைமுகம் உடையவராய் இருப்பர்.

11. ஏரம்ப விநாயகர் – அபயம், வரதம், பாசம், தந்தம், அக்ஷமாலை, பரசு, ஐந்துசிரம், கனகநிறமாக த்யானிக்கப்படுவர்.

12. லக்ஷ்மிகணேசர் – இவர் தாமரையில் எழுந்தருளினராய் மாணிக்ககும்பம், அங்குசம், பாசம், செந்தாமரையுள்ளவராய்த் தியானிக்கப்படுவர்.

13. மாககணேசர் – இவர்பத்மாசனராய், கதை, தந்தம், பாசம், கும்பம், கௌரவர்ணம், சுவர்ணவர்ணமாய், யானைமுகத்துடன் தியானிக்கப்படுவர்.

14. புவனேசகணபதி – இவர், கரும்புவில், புஷ்பபாணம் பாசம், அங்குசம் உடையவராய்ச் சகலாபரண மணிந்தவராய்த் தியானிக்கப்படுவர்.

15. நிருத்தகணபதி – பாசம், அங்குசம், ஒடிந்ததந்தம், கல்பதருவின்மலர், உடையராய். பொன்மேனியுடையராய், நிருத்தபதமுடையவராய்த் தியானிக்கப்படுவர்.

16. ஊர்த்வ கணபதி - கஜவக்த்ரம், திரிநேத்ரம், ஏகதந்தம், பாசாங்குசம், ஊர்த்வபாகு, துதிக்கையில் இலட்டுகம், உடையராத் தியானிக்கப்படுவர்.

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல். 52

இல்வாழ்க்கைக்குத் தக்க நற்பண்பு மனைவியிடம் இல்லையானால், ஒருவனுடைய வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புடையதானாலும் பயன் இல்லை.

உ

ஸ்ரீ அருளாநந்தப் பிள்ளையார் துணை

காரைநகர் - புளியங்குளம்

# ஸ்ரீ அருளாநந்தப் பிள்ளையார்

# திருவூஞ்சல்

- வேலுப்பிள்ளை குமாரசுவாமி

## காப்பு

பூமலியும் பொன்னகராம் யாழ்ப்பா ணத்தில்
பொலிந்திலங்கு சீலமொடு சைவம் வாழும்
நாமலியும் பாவலர்கள் போற்றிப் பாடும்
நற்காரை நகர்ப்புளியங் குளத்தில் மேவும்
பாமலியும் நயம்நிறையும் அருளா நந்தப்
பதிப்பிள்ளை யார்இனி ஊஞ்சல் ஆட
தாமரையின் பாதமலர் தரணி மீது
தமிழுஞ்சல் தனைப்பாடக் காப்ப தாமே.

## நூல்

திருமேம நாற்சுருதிக் கால்கள் நாட்டித்
திகழுமுப நிடதமெனும் விட்டம் பூட்டி
அருஞானக் கலைத்தரள வடங்கள் மாட்டி
அருளுசிவ ஆகமத்தின் பலகை தேக்கி
பெருஞானப் பிரணவமாம் பதுமம் வைகிப்
பேரின்பத் தமிழுஞ்சல் தன்னி லேறி
அருட்காரை நகர்புளியங் குளத்தின் மேவும்
அருளா நந்தமூர்த்தி ஆடீர் ஊஞ்சல் 1.

பெருங்கால்கள் நால்மார்க்கப் பக்தி யாகப்
பொலிவிடம் சேரைந்து புலன் களாகத்
தருங்கோல வடம்நான்கும் கரண மாகத்
தவழ்தெய்வத் திரவருளே பலகை யாக
மருங்கேறி முத்தியெனும் ஊஞ்சல் மீது
மன்னுமுயிர் ஆடிடவே அருளும் தேவா!
அருங்காரை நகர்ப்புளியங் குளத்தில் மேவும்
அருளா நந்தமூர்த்தி ஆடீர் ஊஞ்சல் 2.

மணிமேவு முடிமதியும் அரவும் ஆட
மருப்பினோடு மதங்கமுகக் கரமு மாட
பணியான செவிக்குழையும் பதக்க மாட
பாசமொடு அங்குசத்தின் படைக ளாட
பிணியோட அபயமொடு வரத மாட
பீதாம் பரப்பேழை வயிறு மாட
அணிக்காரை நகர்ப்புளியங் குளத்தில் மேவும்
அருளா நந்தமூர்த்தி ஆடீர் ஊஞ்சல் 3.

புவியாடப் பரனாட உமையு மாடப்
புரந்தரனும் மாலயனும் உவந்தே ஆட
ரவியாடச் சசியாட ரம்பை யாட
ஈரேழு பதினாலு லோகம் ஆட
கவிபாடும் கவிவாணர் நாவில் செந்தேன்
கவின்தமிழில் ஊறுமெழில் மலரின் சோலை
அவிழ்க்காரை நகர்ப்புளியங் குளத்தில் மேவும்
அருளா நந்தமூர்த்தி ஆடீர் ஊஞ்சல் 4.

நிலமாதும் கலைமாதும் மலைமா தாட
நித்திலப்பந் தாடுதிரைக் கடலு மாட
அலைமோதும் பக்தருளம் களித்தே ஆட
அருங்கலைகள் செறிந்தாட அண்டம் ஆடத்
தலமேவு கழனியெழில் தண்மை ஆட
தவழுபுரிச் சங்கொடுநெற் சங்கு மாட
அலர்காரை நகர்புளியங் குளத்தில் மேவும்
அருளா நந்தமூர்த்தி ஆடீர் ஊஞ்சல் 5.

அமிழ்தான தமிழவ்வை அகவல் கேட்ட
ஆனந்த ஆனைமுகச் செவியு மாட
கமழ்மாவின் கனிபெறவே அரனு மையை
காசினியாய் வலம்வந்த கால்க ளாட
குமரான குறத்தியையே குமர னுக்கே
கொடுத்திடவே உதவுமதக் கரமு மாட
அமர்காரை நகர்புளியங் குளத்தில் மேவும்
அருளா நந்தமூர்த்தி ஆடீர் ஊஞ்சல் 6.

ஒருகொம்பை முறித்தெடுத்து மேரு மீதில்
ஒப்பரிய பாரதத்தை எழுதும் தேவா!
தருதும்பை ஆத்தியொடு அறுகு சூடித்
தண்ணருளை அடியவர்க்கு அருளும் நாதா!
பெருவண்மைத் தனவந்தர் கரம் சிவப்பப்
பொன்னள்ளித் தமிழ்ப்புலமைப் பரிசு நல்கும்
அருங்காரை நகர்ப்புளியங் குளத்தில் மேவும்
அருளா நந்தமூர்த்தி ஆடீர் ஊஞ்சல் 7.

If the wife be without domestic excellence, whatever (other) greatness (be possessed in) the conjugal state, it is nothing. 52

சிகைக்கங்கா தரனுமையோர் வடந்தொட் டாட்டச்
செந்திருவும் மாலுமொரு வடந்தொட் டாட்ட
முகத்தானும் வாணியுமோர் வடந்தொட் டாட்ட
முந்துபெரும் பக்தரொரு வடந்தொட் டாட்ட
இகத்தோரும் போற்றுவயல் சோலை குழும்
இனியதமிழ் சைவமதம் போற்றி வாழும்
அகக்காரை நகர்ப்புளியங் குளத்தில் மேவும்
அருளா நாந்தமூர்த்தி ஆடீர் ஊஞ்சல் 8.

நிறக்காளை ஞாயிறுவும் திங்கள் சேர்ந்து
நீள்ஆல வட்டங்கள் ஏந்தி நிற்ப
திறத்தோடு செவ்வாய்நின் பண்பு தன்னைத்
திகழுமிசை பாடித்தும் புருவும் போற்ற
விறல்தீரப் பணியணியாம் வியாளன் பூண்டு
வெள்ளியரி ஆசனித்தே ஆடீர் ஊஞ்சல்
அறக்காரை நகர்ப்புளியங் குளத்தின் மேவும்
அருளா நந்தமூர்த்தி ஆடீர் ஊஞ்சல் 9.

எழில்மேவும் அருட்பாதா ஆடீர் ஊஞ்சல்
ஏரம்ப மூர்த்தியே ஆடீர் ஊஞ்சல்
கழல்சூனும் கணநாதா ஆடீர் ஊஞ்சல்
கஜமுகனே கணபதியே ஆடீர் ஊஞ்சல்
பழச்சோலைப் பதிநாதா ஆடீர் ஊஞ்சல்
பராபரனே தயாபரனே ஆடீர் ஊஞ்சல்
அளிக்காரை நகர்ப்புளியங் குளத்தில் மேவும்
அருளா நந்தமூர்த்தி ஆடீர் ஊஞ்சல் 10.

## வாழி

மறைநூலோர் வானமரர் வாழி! வாழி!!
மாசற்ற ஆவினமும் வாழி! வாழி!!
மழைவாழி! மன்செங்கோல் மக்கள் வாழி!
மங்கையரின் கற்புநெறி ஞானம் வாழி!
விழைபூமி நெல்வயலும் வாழி! வாழி!!
விளங்குதமிழ் சைவநெறி வாழி! வாழி!!
அறக்காரை நகர்வாழி அருளா நந்த
ஆனைமுகன் வாழிதமிழ் ஊஞ்சல் வாழி!

சுபம்

சுருட்டி லாலி ஆதி

அருளா நந்தவி நாயகனே லாலி
திருக்கா ரைப்புளி யங்குள வாசலாலி
பெருமா னேஅருள் ஆனந்தப் பிள்ளைலாலி
அருமா தவரேத்தும் ஆனைமுகனே லாலி

சோடச கணபதி லாலி சுப லாலி
சோமனு மைமகனே லாலி சுப லாலி
பாலக ணபதியே லாலி சுப லாலி
தருண கணபதியே லாலி சுப லாலி
பக்த கணபதியே லாலி சுப லாலி
வீர கணபதியே லாலி சுப லாலி
சக்திக் கணபதியே லாலி சுப லாலி
துவிச கணபதியே லாலி சுப லாலி

பிங்கள கணபதி லாலி சுப லாலி
உச்சிட்ட கணபதியே லாலி சுப லாலி
விக்ன கணபதியே லாலி சுப லாலி
க்ஷிப்ர கணபதியே லாலி சுப லாலி

ஏரம்ப கணபதியே லாலி சுப லாலி
லஷ்மி கணபதி லாலி சுப லாலி
மஹா கணபதி லாலி சுப லாலி
விஜய கணபதியே லாலி சுப லாலி

நிருத்த கணபதியே லாலி சுப லாலி
ஊர்த்துவ கணபதி லாலி சுப லாலி
காத்தருள் வாய் கணேசா லாலி சுப லாலி
காரைப் புளியங்குள கஜமுகனே லாலி

சுபம்

## எச்சரிக்கை

திண்ணபுர சிவனாரின் சேயே எச்சரிக்கை
தேவரிடர் களைந்திட்ட தேவா எச்சரிக்கை
வண்ணமிகு ஆனைமுக வடிவா எச்சரிக்கை
மாங்கனி பெற்றவுயர் மகிழ்பா எச்சரிக்கை
கண்ணனவன் மருகனே! கணபதி எச்சரிக்கை
காவிரி தந்தபெருங் கருணையே எச்சரிக்கை
மண்புகழ் புளியங்குள வாசா எச்சரிக்கை
மாண்புறும் அருளானந்த பிள்ளையே எச்சரிக்கை

## பராக்கு

அந்தண வடிவாய் வந்தவா பராக்கு
அறுகினை விரும்பி அணிபவ பராக்கு
சுந்தரப் பிரணவ சொரூபா பராக்கு
சொல்லரும் மோதக சுவைஞா பராக்கு
கந்தற்கு மூத்த கயமுகா பராக்கு
காசினி யோரை காப்பாய் பராக்கு
அந்தமில் கடல் சூழ் அழகுறு காரை
அருளா னந்தப் பிள்ளையே பராக்கு

## மங்களம்

அல்லல் களைந்திடு மைங்கரற்கு மங்களம்
ஆனைமுக முடைய அழகனுக்கு மங்களம்
சொல்லார் பிரணவ சொரூபிக்கு மங்களம்
தூயதமிழ் நல்கின்ற தூமணிக்கு மங்களம்
நல்லார் புகழ்காரை நாட்டவர்க்கு மங்களம்
நலஞ்சேர் புளியங்குள நாதனுக்கு மங்களம்
எல்லையில் லாதஎழில் அடியவர்க்கு மங்களம்
ஈழமலி நாட்டவர்க்கும் எல்லோர்க்கும் மங்களம்

இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை? 53
மனைவி நற்பண்பு உடையவளானால் வாழ்க்கையில் இல்லாதது என்ன? அவன்
நற்பண்பு இல்லாதவளானால் வாழ்க்கையில் இருப்பது என்ன?

# வாழ்த்துரை

கே. கே. சுப்பிரமணியம்

காரைநகர் அருளானந்தப்பிள்ளையார் மகா கும்பாபிஷேகம் 19.4.2000 ஆண்டு புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வெகுசிறப்பாக நடைபெற்றது. பிரதிஸ்டா சிரோமணி சாமி விஸ்வநாதக் குருக்கள் பிரதம குருவாயிருந்து நடத்தி வைத்தார்.

மகா கும்பாபிஷேகக் கிரியைகள் 15.4.2000 ஆண்டு ஆரம்பமாகியது. ஸர்வ சாதக திலகம் சிவஸ்ரீ தே. க. முத்துக்குமாரசாமி சிவாசாரியாரும் தமிழகத்தில் இருந்து வருகை தந்து சிறப்பித்தமை பிள்ளையார் அருள்தான்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவை அமைந்த இவ்வாலயம் அறங்காவலர் சபையினதும், பிள்ளையார் பக்தர்களான கொடை வள்ளல்களினதும், சிறப்பாகச் செயலாளர் திரு. நடராசா சண்முகநாதனதும் ஆதரவோடு பல லட்ச ரூபா செலவில் திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் கோவில் காரைநகரில் ஏன் சைவ உலகிற் சிறப்புற்று இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. புராதன பெரும் குளம், புளியங்குளம். ஆலயம் வயல்கள் சூழவே அமைந்துள்ளது பெரும் சிறப்பு. ஆலய வாயலில் உள்ள பிரமாண்டமான மருதமரம் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கூறுவர்.

காரைநகரில் சிவன் கோயில், அம்பிகை கோயில், பிள்ளையார் கோயில், முருகக் கடவுள் கோயில், வைரவக் கடவுள் கோயில் எனப் பல கோயில்கள் உண்டு.

எம் மக்கள் பக்தியுடன் தினமும் காலையில் புளியங்குளத்தில் நீராடித் தேங்காய் உடைத்துப் பிள்ளையாரை வழிபட்டுத்தான் தங்கள் கருமங்களை ஆரம்பிப்பார்கள். கால்நடைகள் புளியங்குளத்தில் வந்து நீர் பருகுவதை இன்றும் காணலாம்.

மகா கும்பபிஷேகம் சிறப்பாக நடைபெற உதவிய அனைவருக்கும் எல்லாம் வல்ல அருளானந்தப் பிள்ளையார் அருள் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

"லோக சமஸ்தா சுகிணோ பவந்து!"

## காரைநகர் புளியங்குளம் பிள்ளையார் கோவில் புனருத்தாரணமும் கும்பாபிஷேகமும்

### நன்றி நவிலல்

19.05.2000ம் ஆண்டு புதன்கிழமை நடைபெற்ற மேற்படி கும்பாபிஷேகத்தையொட்டி வெளிவரும் சைவநீதி சிறப்பு மலரில் நன்றி பாரட்டுவது:

- ☆ சைவநீதி இதழ் வெளியீட்டுக் குழுவினர்க்கும்,
- ☆ மேற்படி கும்பாபிஷேக வைபவத்தை வானொலியில் ஒலிபரப்பிய இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சிக் குழுவினர்க்கும்,
- ☆ கும்பாபிஷேகக் கிரியைகளில் பங்குபற்றிய சாமி விஸ்வநாதக் குருக்கள், தென்னிந்திய முத்துக்குமாரசாமி குருக்கள் மற்றும் பல பாகங்களிலுமிருந்து பங்குபற்றிய குருக்கள்மாருக்கும்,
- ☆ காரைநகரில் இருந்து புனருத்தாரண வேலைகளையும் கும்பாபிஷேக, மண்டலாபிஷேகக் கிரியைகளுக்கு உதவியோர்களுக்கும்,
- ☆ பணவுதவி செய்து இக்கைங்கரியங்களை ஒப்பேற்ற வழி செய்தோர்க்கும்,
- ☆ நிகழ்ச்சிகளைப் பிரசுரித்து மக்களெல்லோர்க்கும் விளம்பரப்படுத்திய பத்திரிகையாளர்களுக்கும்,
- ☆ கும்பாபிஷேகத்தை நேரில் நின்று நடத்த உதவிய திருப்பணிச் சபைத் தலைவர் திரு. ச. பொ. பாலசுப்பிரமணியம் அவர்கட்கும். செயற்குழு நன்றி பாராட்டுகின்றது

இங்ஙனம்
காரைநகர் புளியங்குளம்
பிள்ளையார் கோவில் திருப்பணிச் சபை நிர்வாகக் குழு

If his wife be eminent (in virtue) what does (that man) not possess? If she be without excellence, what does (he) possess? 53

# விநாயக சதுர்த்தி விரதம்

- செ. நவநீதகுமார்-

நாம் எண்ணிய கருமங்கள் எளிதில் முற்றுற விநாயகப் பெருமானை வழிபாடு செய்தே கருமங்களைத் தொடங்குகிறோம். விநாயகரை வழிபட்டு மேற்கொள்ளும் காரியங்கள் இடையூறின்றி, விக்கினங்களின்றி நிறைவுறும். விக்கினங்களைத் தீர்ப்பதனால் விக்கினேஸ்வரன் என்ற பெயர் அமைந்துள்ளது.

விநாயகரை வழிபடும் முறை இலகுவானது. இவர் ஆற்றங்கரை, குளக்கரை. அரச மரத்தடி, தெருச்சந்திபோன்ற இடங்களில் எழுந்தருளி இருப்பார். சந்தனத்தால், அல்லது சாணத்தினால் பிள்ளையார் பிடித்து அறுகுசாத்தி வழிபடலாம். சிரசிலேமும்முறை குட்டித் தோப்புக்கரணம் போட்டு வழிபடுவது பெருமானுக்கு உவப்பானது. ஒருமுறை வலம் வந்து வணங்கினாலும் போதும். இவருக்கு மிகவும் உவப்பானது தேங்காய். விநாயகர் சந்நிதியில் சிதறு தேங்காய் அடித்து வணங்குவர். எமது பாவங்களைத் தேங்காயாகப் பாவனை செய்து பெருமான் முன் சிதற அடித்துத் தேங்காய் சிதறுவது போல எமது பாவங்களும் தீவினைகளும் சிதறி அழிவதையே இத்தத்துவம் விளக்குகின்றது.

விநாயகருக்குரிய விரதங்கள் மூன்றாகும். விநாயக சுக்கிரவாரம், விநாயக சஷ்டி, சதுர்த்தி என்பன அவை. வைகாசிமாதப் பூர்வ பக்க முதற் சுக்கிரவாரம் (வெள்ளிக்கிழமை) தொடக்கம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் அனுஷ்டிப்பது விநாயகசுக்கிர வாரவிரதமாகும்.

கார்த்திகை மாத அபரபக்கப் பிரதமை முதல் மார்கழிமாதப் பூர்வபக்கச் சஷ்டி ஈறாக இருபத்தொரு தினங்கள் அனுஷ்டிப்பது விநாயக சஷ்டி விரதமாகும்.

ஆவணி மாதப் பூர்வபக்கச் சதுர்த்தி முதல் மாதம் தோறும் வரும் சதுர்த்தியில் அனுஷ்டிக்கும் விரதம் சதுர்த்தி விரதமாகும். ஆவணிமாதத்தில் வரும் பூர்வபக்கச் சதுர்த்தி விநாயகசதுர்த்தி எனப்பெயர் பெறும். இந்நாள் விநாயகர் அவதார தினம் என்பர்.

இவ்விரதம் அனுஷ்டிப்பவர் அதிகாலை எழுந்து நீராடி நித்திய கருமானுஷ்டானங்களை முடித்து விநாயகர் வழிபாடு செய்தல் வேண்டும். வீட்டில் ஓர் இடத்தைச் சுத்தப்படுத்தி, மாவிலை, தோரணம், பூமாலை என்பவற்றால் அலங்கரித்து விநாயகர் திருவுருவை எழுந்தருளப்பண்ணி வழிபடல் வேண்டும். தங்கத்தால், வெள்ளியால் அல்லது மண்ணால் வசதிக்கு ஏற்றபடி விநாயகர் திருவுருவை அமைக்கலாம்.

ஆவாகனாதி சோடோபசார பூஜை செய்து, நிவேதனம், தீபாராதனை அர்ச்சனை தோத்திரபாராயணம் செய்து வழிபடுதல் முறையாகும். விநாயகருக்கு உவப்பான நிவேதனங்களாகப் பின்வருவனவற்றை அருணகிரிநாதர் குறிப்பிடுவார்.

"இக்கவரை நற்கனிகள் சர்க்கரைபருப் புடனெய்
எட்பொரி யவற்றுவரை இளநீர் வண்டெச்சில்
பயறப்பவகை பச்சரிசி பிட்டு வெளரிப்பழ
மிடிப்பல் வகை தனிமூல
மிக்கவடிசிற் கடலை"

கரும்பு, நாவற்பழம், விளாம்பழம் முதலிய பழவகை, வெல்லம், பருப்பு நெய், எள்ளுருண்டை,

கடமைக்காக பெரிய தியாகமுஞ் செய்ய ஒவ்வொரு மதத்தினருங் கற்றுக் கொள்ள வேண்டியது அன்போடு தேசத்துக்குப் பணி செய்வதே அந்தக் கடமை

❖❖❖❖❖

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண்டாகப் பெறின்? 54
இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப்பெற்றால், பெண்ணைவிடப் பெருமையுடையவை வேறு என்ன இருக்கின்றன?

நெற்பொரி, அவல், துவரை, இளநீர், தேன், பயறு அப்பவகை, பச்சைஅரிசி (காப்பரிசி), பிட்டு, வெள்ளரிப்பழம், தினைமா, வள்ளிக்கிழங்கு, மோதகம், வெற்றிலை, பாக்கு, தேங்காய் முதலியவற்றைப் பெருமானுக்கு நிவேதனம் பண்ணவேண்டும். மாசிப்பச்சை, கரிசலாங்கண்ணி, வில்வம், அறுகு இலந்தை, ஊமத்தை, மாவிலங்கை, நாயுருவி, சிறுவழுத்தலைவன்னி, நொச்சி, மந்தாரை, மருக்கொழுந்து, அரளி, கோங்கு, அரசு, வெள்ளெருக்கு, மருது, விஷ்ணு கிரந்தி, மாதுளை, ஜாதிமல்லிகை ஆகிய இருபத்தொரு பத்திரபுஷ்பங்களால் அர்ச்சிக்க வேண்டும். அன்று அறுகினால் அர்ச்சிப்பது விசேடமான தொன்றாகும். இரட்டையாக இருபத்தொரு அறுகம்புல்லால் அர்ச்சிப்பது சிறப்பானதாகும்.

சுலபன் என்றொரு அரசன் நீதிவழுவாது தன்நாட்டை ஆண்டு வந்தான். அவன் மனைவி சுபத்திரை. தினந்தோறும் யாசகர் பலர் அவனிடம் வந்து பொருள் பெற்றுச் சென்றனர்.

ஒருநாள் அரசன் சபையில் இருந்தவேளை மதுசூதனன் என்ற அந்தணனொருவன் அங்கு வந்தான். அவன் வறுமையால் வாடி மெலிந்திருந்தான். அவனது தோற்றத்தைக் கண்ட அரசன் நகைத்தான். அரசனின் சிரிப்பு அந்தணனுக்கு எரிச்சலை ஊட்டிற்று "ஏழைகளைக் கண்டு இரங்கவேண்டிய நீ வறுமையால் வாடிய என்னைப் பார்த்து அறிவில்லாதவன் போல் நகைத்தாய். எனவே நீ அறிவில்லாத பிராணியான கழுதையாகித்துன்புறுவாய்" எனச் சபித்தான் மதுசூதனன். இதைக் கண்ணுற்ற அரசி வெகுண்டு "தவறு செய்பவர்களை மன்னித்தல் மனிதப்பண்பு. அப்படி இன்றிக் கோபங்கொண்டு சாபம் கொடுத்த நீ எருதாகப் பிறந்து உழலக்கடவாய்" என்றாள். இதனால் வெகுண்ட அந்தணன் "உன் கணவன் தவறு செய்ய அதைப் பொருட்படுத்தாது எனக்குச் சாபம் கொடுத்தாய். நீ இழிகுலப் பெண்ணாய்ப் பிறந்து அலைவாயாக" என்றான்.

இவர்கள் சாபம் பலிக்கத் தொடங்கியது. அரசன் கழுதையாகப் பிறந்து ஒரு சலவைத் தொழிலாளியிடம் இருந்தான். அவன் பொதி சுமப்பதற்கு கழுதையைப் பயன்படுத்தினான். வேளா வேளைக்குப் போதிய உணவு போடுவதில்லை. இடையிடையே கழுதையை அடித்துத்துன் புறுத்துவான்.

மதுசூதனன் எருதாகி உழவனொருவனிடம் வேலை செய்தான். பகல் முழுவதும் உழுவதும், வண்டியிழுப்பதுமாக எருது நன்றாக வேலை செய்தது. இரவில் உழவன் போடும் புல்லை உண்டு அரைவயிறை நிரப்பும், வேலைப்பழுவாலும், போதிய உணவு இல்லாததாலும் வருந்தியது அவ்வெருது.

அரசி சேரிப்புறத்திற் பெண்ணாகப் பிறந்து பலதுன்பம் முழன்று கலங்கிக் காலம் கழித்துவந்தாள். பகலிலே புல் வெட்டி விற்று அவ்வருமானங்கொண்டு வாழ்க்கையை ஓட்டி வந்தாள்.

ஒருநாள் சேரிப்புறத்துப் பெண் புல் வெட்டுவதற்காக ஆற்றங்கரைக்கு வந்தாள். அங்கு கழுதை நின்றது. உழவன் புல்மேய்வதற்கென எருதை அங்கு கொண்டு வந்துவிட்டான். அவ்வேளை மழை பொழியத் தொடங்கியது. ஆற்றங்கரையில் விநாயகர் கோயில் இருந்தது. வெட்டிய புற்கட்டுடன் பெண் கோயில் மண்டபத்திற்கு வந்து ஒதுங்கி நின்றாள். எருதும், கழுதையும் அப்பெண் நின்ற மண்டபத்தில் வந்து மழைக்கென ஒதுங்கி நின்றன. அன்று விநாயக சதுர்த்தி. கோயிலில் அடியவர்கள் கூடி விநாயகருக்கு அபிஷேக ஆராதனை செய்து கொண்டிருந்தனர்.

பகல் உணவு உண்ணாததாற் பெண் சோர்ந்திருந்தாள். பசியால் வாடி இருந்த எருதும்,

> தாய் தந்தையர் இருக்கும்போது அவரை இகழ்ந்து நடப்பதும், அவர் இறந்தபோது உலகோர் மெச்சும்படி துன்பப்டுவதும் ஆடம்பர வேடிக்கைகளைச் செய்வதும் மூடர் செய்கை.
>
> ❖❖❖❖❖
>
> பெண்டிரும், உண்டியும், பொருளும் காப்பாற்று முறையில் காப்பாற்றாவிட்டால் கெட்டுப்போம்.

**What is more excellent than a wife, if she possess the stability of chastity? 54**

கழுதையும் பெண்ணின் பக்கத்தில் இருந்த அறுகம் புல்லைக்கண்டு அதை உண்ணவெண்ணி வாயாற் பற்றி இழுத்தன. தனது அறுகம்புற்கட்டை இவை இழுப்பதைக்கண்ட பெண் எருதை அடித்தாள். எருது கழுதையை மோதியது. காற்றுப்பலமாக வீசவே எருதின் வாயிலிருந்தும், கழுதையின் வாயில் இருந்தும் புற்கட்டில் இருந்தும் அறுகம்புல் பறந்து சென்று விநாயகர் திருவுருவிற்பட்டது. இதைப்பார்த்த அடியவர்கள் அபச்சாரச் செயல் இதுவெனப் பெருமானுக்கு அபிஷேகம் செய்தனர். இம்மூன்றையும் மண்டபத்தை விட்டுச்செல்லுமாறு விரட்டினர். இதனால் இவை மூன்றும் கோயிலைச் சுற்றி அலைந்தன.

அவ்வேளை தேவகணங்கள் விமானத்தில் வந்து பெண்ணையும், கழுதையையும், எருதையையும் விண்ணுலகிற்கு வருமாறு அழைத்தனர். இந்த அதிசயத்தைக்கண்டு அங்கு நின்றவர்கள் "விண்ணுலகிற்குச் செல்வதற்குரிய தகுதிதான் இவற்றிற்கென்ன? எனவினாவினர். "விநாயக சதுர்த்தித்தினமான இன்று பகல் உண்ணாதிருந்து அறுகம்புல்லால் அர்ச்சித்தபலன் இதுவாகும்" என்றனர் தேவகணங்கள். அறிந்தோ அறியாதோ அறுகினால் விநாயகரைப்பூசிப்பது பேறுதரவல்லதொன்றாகும்.

அன்று பகல் ஒருவேளை உணவு உண்பது சிறந்தது. இயலாதவர்கள் இரவில் பால்பழம் அல்லது பலகாரம் உட்கொள்ளலாம். பூஜை வழிபாடு முடிந்த பின்னர் இயன்றளவு தான தருமம் செய்து மண்ணாற் செய்த விநாயகர் திருவுருவை ஆற்றில் விடுவது முறையாகும். இவ்விரதம் இருபத்தொருவருடம் அனுஷ்டிப்பது சிறந்தது.

ஒரு சமயம் தேவர்கள் முன்னிலையில் திருநடனம் புரிந்தார் விநாயகர். அவரின் தொந்தி. துதிக்கை, மோதகம் ஏந்தியகை என்பவற்றைக் கண்டு சந்திரன் சிரித்தான். விநாயகர் கோபங்கொண்டு "சுயபிரகாசமின்றிச் சூரியன்மூலம் பிரகாசடையும் நீ அழகுடையவன் என்று எண்ணினாய். பெரியோர் சபையிலே அடக்கமின்றி நகைத்தாய். உன்னைப் பார்ப்பவர்கள் அலைந்து திரியக்கடவர்" எனச்சாபமிட்டார்.

சந்திரன் ஒளி மழுங்கிப் பூவுலகிற்கு அடியிற் சென்று மறைந்திருந்தான். இந்திரன் உபதேசப்படி

> ஏவிய சொற்கேளா, உண்டியும், பொருளும் காப்பாற்று முறையில் காப்பாற்றாவிட்டால் கெட்டுப்போம்.
>
> ❖❖❖❖❖
>
> தனக்கு உதவியற்றவரைச் சேர்தலும் சினமுற்ற காலத்தில் பயனற்ற மொழிகளைப் பேசுதலும், தன்னிடத்துத் தொழில் செய்பவனோடு பொறுமை பாராட்டாமல் வேற்றுமைப்படுதலும் துன்பத்தை விளைவிக்கும்.

சந்திரன் ஏகாட்சர மந்திரத்தைச் ஜெபித்து இருபத்தொருவருடம் விநாயகரை வழிபட்டான். விநாயகரும் மகிழ்ந்து சந்திரனுக்கு அனுக்கிரகம் புரிந்தார். "ஆவணி மாத பூர்வச் சதுர்த்தியில் உன்னைப் பார்ப்பவர்கள் துன்புறுவர். ஏனைய காலங்களில் நீ முன்போல இருக்கக்கடவை. அங்காரகசதுர்த்தி தோறும் நீ உதயமாகின்றபோது என்னைப் பூசித்து உன்னை யாவரும் துதிசெய்யக்கடவர்" என்றார் விநாயகர். சந்திரனின் ஒரு கலையைத்தமது முடியிற் சூட்டிப்பால சந்திர விநாயகரானார்.

மாளவதேசத்தைச் சந்திராங்கதன் என்னும் அரசன் ஆண்டு வந்தான் அவன் மனைவி இந்துமதி. காட்டுவிலங்குகள் நாட்டினுள் வந்து மக்களைத் துன்புறுத்தவே மக்கள் மன்னனிடம் வந்து முறையிட்டனர்.

சந்திராங்கதன் வீரர்பலர் புடைசூழ வேட்டையின் பொருட்டுக்காடு நோக்கிச் சென்றான். கொடிய விலங்குகளைக் கொன்று குவித்தான் மன்னன். அவ்வேளை ஓர் அரக்கி அரசனைப் பிடிப்பதற்கென ஆர்ப்பரித்து வந்தாள். அரசன் அங்குள்ள குளம் ஒன்றினுட் குதித்தான். அக்குளத்தில் நாக மங்கையர் நீராடிக் கொண்டிருந்தனர் அவர்கள் அரசனைக் கண்டு மையல் கொண்டு அவனை நாக லோகத்திற்குக் கொண்டு சென்றனர். நாக கன்னியர் தம்மை மணந்து இன்புறுமாறு மன்னனை வேண்டினர். "நான்" நீதிமுறை தவறாதவன். திருமணமானவன் என் மனைவியைத்தவிர வேறு பெண்களைக் கனவிலும் கருதாதவன் என்றான் மன்னன். உபசாரம் பல செய்தும் நாக கன்னியரால் அரசன் மனத்தை மாற்றமுடியவில்லை.

> தெய்வம் தொழாஅள் கொழநன் தொழுதெழுவாள்
> பெய் எனப் பெய்யும் மழை. 55
> வேறு தெய்வம் தொழாதவளாய் தன் கணவனையே தெய்வமாகக்கொண்டு தொழுது துயிலெழுகின்றவள் பெய் என்றால் மழை பெய்யும்!

மன்னனுடன் காட்டிற்கு வந்தவீரர்கள் எங்கு தேடியும் மன்னனைக் கண்டிலர். இந்துமதியிடம் சென்று மன்னன் குளத்துள் வீழ்ந்து இறந்தான் என்றனர் வீரர். இந்துமதி கவலை கொண்டு நிலத்தில் உருண்டு புலம்பினாள். உறவினர் தேற்ற ஒருவாறு தேறி மாங்கல்யம் இழந்து விதவைக் கோலம் பூண்டிருந்தாள்.

ஒரு நாள் நாரத மகரிஷி மாளவ தேசத்திற்கு வந்தார். அவரை உபசரித்து, சந்திராங்கதனுக்கு நடந்ததென்ன? என வினாவினாள் இந்துமதி. முக்காலமும் அறியும் முனிவர் ''சந்திராங்கதன் நாகலோகத்தில் இருக்கிறான்'' என்று ஞானதிருஷ்டியால் அறிந்து கூறினார். "அவனை அடையவேண்டுமாயின் விநாயகர் சதுர்த்தி விரதத்தை அனுஷ்டி" என்றார் முனிவர். இந்துமதி முறையாக விநாயகர் சதுர்த்தி விரதம் அனுஷ்டித்தாள்.

> கடன்படும் செல்வர்களிலும் கடன்படா வறியவர்களே மிகுந்த சுகம் உடையவர்கள்.

நாக கன்னியர் தம் எண்ணம் நிறைவேறாதென எண்ணித் திரவியங்கள் பல கொடுத்து மன்னனைக் குளக்கரையிற் கொண்டு வந்து விட்டனர். மன்னன் நாடு நோக்கி வருவதைக் கண்ட அமைச்சர் முதலானோர் அவனை வரவேற்று நடந்தவற்றைக் கேட்டறிந்தனர். வேதசாத்திர விற்பன்னர் கூறிய பிரகாரம் பிராயச்சித்தம் செய்து மன்னன் இந்துமதியுடன் வாழ்ந்து வந்தான். இருவருமாக விநாயக சதுர்த்தி விரதம் அனுஷ்டித்து இறுதியில் வீடுபேறு பெற்றனர்.

இவ்விரதத்தை நோற்றுத் தமயந்தி தன்னை விட்டுப் பிரிந்த நளனை மீண்டும் அடைந்தாள்.

**சங்கடஹர சதுர்த்தி**

சங்கடஹர என்றால் உபத்திரவங்களைப் போக்குவது என்றுபொருள்படும். கடன், நோய், சிறைவாசம், மனக்கிலேசம் முதலிய துன்பங்களாற் பீடிக்கப்பட்டவர்கள் அவற்றை விடுத்து இன்பம் வேண்டி நோற்கும் விரதம் சங்கட ஹரசதுர்த்தி விரதமாகும். இவ்விரதம் ஆவணி மாத அபரபக்கச் (தேய்பிறை) சதுர்த்தியில், சந்திரோதய காலத்தில் அனுஷ்டிப்பதாகும். மாசிமாத அபரபக்கச் சதுர்த்தியிலும் மாதம் தோறும் வரும் அபரபக்கச் சதுர்த்தி சந்திரோதயத்திலும் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படும்.

சங்கடஹர சதுர்த்தி அன்று காலை எழுந்து நீராடி நித்தியகரும அனுஷ்டானங்களை முடித்து விநாயகரைப் பூசிக்க வேண்டும். சந்திர உதயம் வரை எந்த உணவையும் உட்கொள்ளேன். உன்னையே நினைத்திருப்பேன், எனது மனத்துயரை நீக்கி அருள்வாய் என்று சங்கற்பம் செய்து பூஜையை ஆரம்பிக்கவேண்டும். அவல், மோதகம், எள்கலந்த கொழுக்கட்டை போன்ற இனிப்புப்பண்டங்களை நிவேதித்து அறுகினால் அர்ச்சிப்பது உகந்தது. தரித்திரங்கள் நீங்கவேண்டின்குடை, (செருப்பு) பாதரக்ஷை, பசு முதலியனவற்றை அந்தணருக்கு தானம் கொடுத்தலும், பிராமண போஜனம் செய்வித்தலும் வேண்டும்.

சந்திர உதயவேளையிலே விநாயகரைப் பூசித்த பின் ரோகிணியுடன் சந்திரனையும் பூசித்தல் முறையாகும். அதன்மேல் உப்புச் சேர்க்காத உணவு உட்கொள்வது சிறந்தது.

தன் ஆட்சியில் நாட்டு மக்கள் சுபிட்சமடைய வேண்டி அரிச்சந்திரன் இவ்விரதத்தை அனுஷ்டித்தான் சீதாபிராட்டியாரைத் தேடச் சென்ற அனுமான் இவ்விரதத்தை நோற்று வெற்றி பெற்றான். வனவாசத்திற் துன்புற்ற பாண்டவர்களுக்குக் கிருஷ்ணன் இவ்விரதமகிமையை உபதேசித்தான். பாண்டவர்களும் இவ்விரதத்தை அனுஷ்டித்து, வெற்றிபெற்று நாட்டை ஆண்டனர்.

சங்கடஹர சதுர்த்தி விரதம் அனுஷ்டிப்போர் தம்மனக்குறை தீர்ந்து தாம் நினைத்தவற்றைப் பெறுவர்.

**She who does not worship God but who on rising worships her husband, if she says let it rain it will rain. 55**

# அருளானந்தப் பிள்ளையாரைத் தொழ ஆனந்த வாழ்வு மிகுத்து வரும்

- கம்பவாரிதி இ. ஜெயராஜ் -

உலகை உய்விக்கும் பெரும் தெய்வம் விநாயகன்
விநாயகன் என்னும் வடசொல்லுக்கு,
தனக்குமேல் ஒரு தலைவன் இல்லாதவன் என்பது பொருள்
அவனே முழுமுதற் கடவுள் என்பது இப்பெயர் தரும் அர்த்தம்
தமிழர் தம் வழிபாட்டு முறை அனைத்தின் தொடக்கத்திலும்
விநாயகனை வழிபடுதல் மரபு
தமிழ்ப் புலவர் பெரும்பாலானோர்
விநாயகனை வேண்டியே தம் நூல் இயற்றத் தொடங்கினர்.
நம் மத வழிபாட்டு முறைகள்,
பாகுபாட்டை வளர்ப்பன என்று, உரைப்பாரை மறுத்து நிற்பது
விநாயக வழிபாடு.
உயர்ந்தவர் தாழ்ந்தவர்
அறிவோர் அறிவற்றோர்
செல்வர் வறியோர் என
எவர்க்கும் வழிபடும் வாய்ப்பை நல்கி நிற்பவன் விநாயகன்
ஏழை எளியவர்க்கெல்லாம் அவனே இறைவன்.
மற்றைய தெய்வங்கள் போல் அணுக அருமையற்றவன்
மஞ்சள் பொடியிலும், களிமண்ணிலும், சாணியிலும்கூட
ஆவாகணம் செய்ய அருள்புரிவன்.
அன்பர் தம் வழிபாட்டில் எளிதில் மகிழ்பவன்
எங்கே, எப்படி, எதில் கூப்பிட்டாலும்
அதனுள் வந்து நின்று அருள் செய்பவன்.
அவனை வழிபட அதிகம் படிக்க வேண்டியதில்லை.
மற்றைய தெய்வ வழிபாடுகளில்
பிராணப் பிரதிஷ்டை பண்ணி அந்தந்த தேவதைகளின் ஜீவகலையை உண்டாக்குவது போல
விநாயகனுக்கு செய்ய வேண்டியதில்லை.
மனதால் பாவித்த மாத்திரத்திலேயே எந்த மூர்த்தியிலும் அவர் வந்து விடுவார்.
காலம் பார்த்து, குளித்து, அர்ச்சனைப் பொருட்களோடு பிரகாரம் சுற்றி,
இறைவனை வணங்குவது மற்றைய தெய்வக் கோயில்களில் வழக்கம்.
அங்ஙனம் சென்றாலும் தெய்வத்தின் அருகில் அங்கெல்லாம் செல்ல முடியாது.
விநாயக விழிபாட்டுக்கோ இக் கட்டுப்பாடெல்லாம் கிடையாது.
விநாயகனோ,
தெருமுலைகளிலும், மரங்களின் கீழும், வீட்டு வாசல்களிலும்
நின்று புறம்புறம் திரிந்து நமக்கு அருள் செய்கிறான்.
வேலைக்கோ, பள்ளிக்கோ, கடைக்கோ போய்வருகிற போதுகூட
அவரைப் பார்த்த மாத்திரத்தில் நெற்றியில் குட்டி தோப்புக்கரணம் போட்டு,
எவரும் எந்நிலையிலும் அவரை வழிபடலாம்.
பிரகாரங்களை எல்லாம் தாண்டி உள்ளே இருக்கும் சுவாமிகளை விட,

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொல்காத்துச் சோர்விலாள் பெண். 56
கற்புநெறியில் தன்னையும் காத்துக்கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றித்,
தகுதியமைந்த புகழையும் காத்து, உறுதி தளராமல் வாழ்க்கின்றவளே பெண்.

வீதியில் நின்று அன்பர்க்கு அருள் செய்யும் விநாயகன் அன்புத் தெய்வம்.
வீதியில் நிற்பதால் எளியனாய் இருப்பினும்,
நம் சமயம் தரக்கூடிய ஆழமான, அற்புதமான பயன் அனைத்தையும் நல்கி,
அரியானாய் இருப்பவனும் இவனே.
தோப்புக் கரணமும் நெற்றியில் குட்டுவதும் தெய்வீக உணர்வை ஏற்படுத்தும் யோக முயற்சிகள்.
விநாயகனை வணங்க தத்துவ ஞானம் கைகூடும்.
விநாயக அகவல் இப்பேர் உண்மையை எடுத்துரைக்கும்.
நம் தமிழர்க்கும் விநாயகனே தலைமைக் கடவுள்
ஔவைக்கு சங்கத் தமிழ் மூன்றும் தந்தவன் அவன்.
நற் குஞ்சரக் கன்றை நன்னினால் கலைஞானம்
கற்கும் சரக்கு அன்று என்கிறார் உமாபதி சிவாச்சாரியார்
இங்ஙனமாய், அழைத்த இடத்தில் வந்து அருள் செய்யும் விநாயகன்
கல்வியையும், ஞானத்தையும், முத்தமிழையும், யோகத்தையும், வீட்டையும்
எவர்க்கும் நல்கும் பெருங்கடவுளுமாம்.
அவ்வருங் கடவுள்
காரைநகர் புளியங்குளத்தில் அமர்ந்திருந்து
அமுதக் கடலாய் அருள் செய்கிறான்
அருள் செய்யும் மூர்த்தி
அன்பர்களின் நேர்த்தி
அருளானந்தப் பிள்ளையாரின் கீர்த்தி
இவை யெல்லாம் ஒன்றுகூட
விநாயகர் வீறு கொண்டு எழுந்து நிற்கிறார்
அல்லல் மிகுந்த இக்காலத்திலும் ஆலயம் காணும் கும்பாபிஷேகம்
இவை அனைத்துக்கும் சான்று.
அன்பர்தம் வினை தீர்த்து என்றும் அருள் செய்வான்
அவன் தாள் பற்றி உய்வோம்


# சைவநீதி - சந்தா விபரம்

| தனிப்பிரதி | | | வருடச்சந்தா | | |
|---|---|---|---|---|---|
| இலங்கையில் | - | ரூபா 25.00 | இலங்கையில் | - | ரூபா 250.00 |
| இந்தியாவில் | - | ரூபா 25.00 (இந்திய ரூபா) | இந்தியாவில் | - | ரூபா 250.00 (இந்திய ரூபா) |

ஏனைய நாடுகளில் ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US $ 15. சைவநீதியின் வளர்ச்சிக்கு உங்கள் ஒவ்வொருவரதும் பங்களிப்புப் பெரிதும் வேண்டப்படும்.

சந்தா அனுப்பப்பட வேண்டிய முகவரி:

**C. NAVANEETHAKUMAR,**
42, Janaki Lane,
Colombo - 04,
Sri Lanka.


**She is a wife who unweariedly guards herself, takes care of her husband, and preserves an unsullied fame.** 56

# சைவ வினா விடை

## பஞ்சாக்ஷரவியல்

- ஆறுமுகநாவலர்

1. சைவர்களாலே நியமமாகச் செபிக்கற்பாலதாகிய சிவமூலமந்திரம் யாது?
ஸ்ரீ பஞ்சாக்ஷரம்

2. ஸ்ரீ பஞ்சாக்ஷர செபத்துக்கு யோக்கியர் யாவர்?
மதுபானமும் மாமிச போசனமும் இல்லாதவராய், ஆசார முடையவராய், சிவதீக்ஷை பெற்றவராய் உள்ளவர்.

3. ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை எப்படிப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்?
தத்தம் வருணத்துக்கும் ஆச்சிரமத்துக்குந் தீக்ஷைக்கும் ஏற்பக் குருமுகமாகவே பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

4. மந்திரோபதேசம் பெற்றவர் குருவுக்கு யாது செய்து கொண்டு செபித்தல் வேண்டும்?
குருவை வழிபட்டு, அவருக்கு வருடந்தோறும் இயன்ற தக்ஷிணை கொடுத்துக்கொண்டே செபித்தல் வேண்டும்.

5. ஸ்ரீ பஞ்சாக்ஷரத்திலே நியமமாக ஒரு காலத்துக்கு எத்தனை உருச் செபித்தல் வேண்டும்?
நூற்றெட் டுருவாயினும், ஐம்ப துருவாயினும், இருபந்தைந் துருவாயினும், பத் துருவாயினும் நியமமாகச் செபித்தல் வேண்டும்.

6. செபத்துக்கு எதைக் கொண்டு உரு எண்ணல் வேண்டும்?
செபமாலையைக் கொண்டாயினும், வலக்கை விரலிறையைக் கொண்டாயினும் உரு எண்ணல் வேண்டும்.

7. செபமாலையை என்ன மணி கொண்டு செய்வது உத்தமம்?
உருத்திராக்ஷமணி கொண்டு செய்வது உத்தமம்.

8. செபமாலைக்கு எத்தனை மணி கொள்ளத் தகும்?
இல்வாழ்வான் இருபத்தேழு மணியும், துறவி இருபத்தைந்து மணியுங் கொள்ளத் தகும். இல்வாழ்வான் நூற்றெட்டு மணி ஐம்பத்துநான்கு மணிகளாலுஞ் செபமாலை செய்து கொள்ளலாம்.

9. செபமாலைக்கு எல்லா முகமணியும் ஆகுமா?
இரண்டு முக மணியும், மூன்று முக மணியும், பன்னிரண்டு முக மணியும், பதின்மூன்று முக மணியுஞ் செபமாலைக்கு ஆகாவாம்; அன்றியும், எல்லா மணியும் ஒரே விதமாகிய முகங்களை யுடையனவாகவே கொள்ளல் வேண்டும்; பல விதமாகிய முக மணிகளையுங் கலந்து கோத்த செபமாலை குற்ற முடைத்து.

10. செபமணிகளை எதினாலே கோத்தல் வேண்டும்?
வெண்பட்டிலேனும் பருத்தியிலேனும் இருபத்தேழிழையினா லாக்கிய கயிற்றினாலே கோத்தல் வேண்டும்.

11. செபமாவது யாது?
தியானிக்கப்படும் பொருளை எதிர்முகமாக்கும் பொருட்டு அதனை உணர்த்தும் மந்திரத்தை உச்சரித்தலாம்.

12. மந்திரம் என்பதற்குப் பொருள் யாது?
நினைப்பவனைக் காப்பது என்பது பொருள். ஆகவே, மந்திரம் என்னும் பெயர், நினைப்பவனைக் காக்கும் இயல்புடைய வாச்சியமாகிய சிவத்துக்குஞ் சிவசக்திக்குமே செல்லும்; ஆயினும், வாச்சியத்துக்கும் வாசகத்துக்கும் பேத மில்லாமை பற்றி, உபசாரத்தால் வாசகத்துக்குஞ் செல்லும்; எனவே, மந்திரம் வாச்சிய மந்திரம் வாசகமந்திரம் என இரு திறப்படும் என்றபடியாயிற்று. (மந் – நினைப்பவன்; திர – காப்பது)

13. மந்திரசெபம் எத்தனை வகைப்படும்?
மானசம், உபாஞ்சு, வாசகம் என மூவகைப்படும்.

14. மானசமாவது யாது?
நா நுனி உதட்டைத் தீண்டாமல், ஒருமை பொருந்தி மனசினாலே செபித்தலாம்.

சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. 57
மகளிரைக் காவல் வைத்துக் காக்கும் காப்புமுறை என்ன பயனை உண்டாக்கும்? அவர்கள் நிறை என்னும் பண்பால் தம்மைத் தாம் காக்கும் காப்பே சிறந்தது.

**15. உபாஞ்சுவாவது யாது?**

தன் செவிக்கு மாத்திரங் கேட்கும்படி, நா நுனி உதட்டைத் தீண்ட மெள்ளச் செபித்தலாம். இதற்கு மந்தம் என்றும் பெயர்.

**16. வாசகமாவது யாது?**

அருகிலிருக்கும் பிறர் செவிக்குங் கேட்கும்படி செபித்தலாம். இதற்குப் பாஷ்யம் என்றும் பெயர்.

**17. இம்மூவகைச் செபமும் பலத்தினால் ஏற்றக்குறைவு உடையனவா?**

ஆம் ; வாசகம் நூறு மடங்கு பலமும், உபாஞ்சு பதினாயிர மடங்கு பலமும், மானசங் கோடி மடங்கு பலமுந் தரும்.

**18. எந்தத் திக்கு முகமாக எப்படி இருந்து செபித்தல் வேண்டும்?**

வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும், மரப் பலகை, வஸ்திரம், இரத்தின கம்பளம், மான்றோல், புலித்தோல், தருப்பை என்னும் ஆசனங்களுள் இயன்ற தொன்றிலே, முழந்தாள் இரண்டையும் மடக்கி, காலோடு காலை அடக்கி, இடத் தொடையினுள்ளே வலப் புறங்காலை வைத்து, இரண்டு கண்களும் மூக்கு நுனியைப் பொருந்த, நிமிர்ந்திருந்து கொண்டு செபித்தல் வேண்டும்.

**19. எப்படி இருந்து செபிக்கலாகாது?**

சட்டை யிட்டுக் கொண்டும், சிரசில் வேட்டி கட்டிக் கொண்டும், போர்த்துக் கொண்டும், குடுமியை விரித்துக்கொண்டும், கௌபீனந் தரியாதும், வேட்டி தரியாதும், விரலிலே பவித்திரந் தரியாதும், பேசிக் கொண்டும், இருளில் இருந்துகொண்டும், நாய் கழுதை பன்றி முதலியவற்றையும் புலையர் முதலாயினோரையும் பார்த்துக் கொண்டுஞ் செபிக்கலாகாது. செபஞ் செய்யும்போது, கோபம், களிப்பு, கொட்டாவி, தும்மல், நித்திரை, சோம்பல், வாதம் முதலியவை ஆகாவாம்.

**20. செபமாலை கொண்டு எப்படிச் செபித்தல் வேண்டும்?**

பிறர் கண்ணுக்குப் புலப்படா வண்ணம் பரிவட்டத்தினால் மூடப்பட்ட செபமாலையை வாசகமாகச் செபிக்கிற் சுட்டுவிரலிலும், மந்தமாகச் செபிக்கின் நடுவிரலிலும், மானசமாகச் செபிக்கின் ஆழிவிரலிலும் வைத்து, சிவபெருமானுடைய திருவடிகளை மனசிலே தியானித்துக்கொண்டு, பெருவிரலினாலே நாயக மணிக்கு அடுத்த முகமேனோக்கிய மணியை முதலாகத் தொட்டு, ஒவ்வொரு மணியாகப் போகத்தின் பொருட்டுக் கீழ்நோக்கித் தள்ளியும், முத்தியின் பொருட்டு மேனோக்கித் தள்ளியுஞ் செபித்து, பின்பு நாயகமணி கைப்பட்டதாயின், அதனை கடவாது திரும்ப மறித்து வாங்கி, அதனைத் திரும்பக் கையில் ஏறிட்டுச் செபித்தல் வேண்டும். செபிக்கும்போது, செபமாலையின் மணிகள் ஒன்றோடொன்று ஓசைப்படிற் பாவ முண்டாம்.

**21. இன்ன இன்ன பொழுது செபித்தவர் போக மோக்ஷங்களுள் இன்னது இன்னது பெறுவர் என்னும் நியமம் உண்டா?**

ஆம்; பிராணவாயுவானது இடப்பக்க நாடியாகிய இடையிலே நடக்கும்போது செபித்தவர் போகத்தையும், வலப்பக்க நாடியாகிய பிங்கலையிலே நடக்கும்போது செபித்தவர் மோக்ஷத்தையும், நடுநிற்கு நாடியாகிய சுழுமுனையிலே நடக்கும் போது செபித்தவர் போகம், மோக்ஷம் என்னும் இரண்டையும் பெறுவர்.

**22. ஸ்ரீ பஞ்சாக்ஷர செபம் எவ்வெக் காலங்களிலே விசேஷமாகச் செய்யத் தக்கது?**

அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, விதிபாதயோகம், பன்னிரண்டு மாதப்பிறப்பு, கிரகணம், சிவராத்திரி, அர்த்தோதயம், மகோதயம் முதலாகிய புண்ணிய காலங்களிலே புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, தியானஞ், செபம் முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும்.

சித்திரை, ஐப்பசி என்னும் இவ்விரண்டு மாதப்பிறப்பும் விஷு எனப்படும்; இவைகளிலே, மாதம் பிறத்தற்கு முன்னெட்டு நாழிகையும் பின்னெட்டு நாழிகையும் புண்ணிய காலம். ஆடி மாதப் பிறப்புத் தக்ஷிணாயனம் எனப்படும்; இதிலே மாதம் பிறக்கு முன் பதினாறு நாழிகை புண்ணிய காலம். தை மாதப் பிறப்பு உத்தராயணம் எனப்படும்; இதிலே, மாதம் பிறந்த பின் பதினாறு நாழிகை புண்ணிய காலம். கார்த்திகை, மாசி, வைகாசி, ஆவணி என்னும் இந்நான்கு மாதப் பிறப்பும் விட்டுணுபதி எனப்படும்; இவைகளிலே, மாதம் பிறக்கு முன் பதினாறு நாழிகை புண்ணிய காலம். ஆனி, புரட்டாதி, மார்கழி, பங்குனி என்னும் இந்நான்கு மாதப் பிறப்பும் சடசீதிமுகம் எனப்படும்; இவைகளிலே, மாதம் பிறந்த பின் பதினாறு நாழிகையும் புண்ணிய காலம். சூரிய கிரகணத்திலே பரிச காலம் புண்ணிய காலம்; சந்திர கிரகணத்திலே விமோசன காலம் புண்ணிய காலம்.

**What avails the guard of a prison?**
**The chief guard of woman is her chastity. 57**

அர்த்தோதயமாவது தை மாதத்திலே ஞாயிற்றுக்கிழமை அமாவாசையுந் திருவோண நக்ஷத்திரமும் விதிபாத யோகமுங் கூடிய காலம். மகோதயமாவது தை மாதத்திலே திங்கட்கிழமையும் அமாவாசையுந் திருவோண நக்ஷத்திரமும் விதிபாதயோகமுங் கூடிய காலம்.

23. ஸ்ரீ பஞ்சாக்ஷர செபத்தாற் பயன் என்னை?

ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தின் பொருளை அறிந்து, சிவபெருமான் ஆண்டவன், தான் அடிமையென்னும் முறைமையை மனத்தகத்தே வழுவாமல் இருத்தி, அதனை விதிப்படி மெய்யன்போடு செபித்துக்கொண்டுவரின், விறகினிடத்தே அக்கினி பிரகாசித்தாற் போல, ஆன்மாவினிடத்தே சிவபெருமான் பிரகாசித்து, மும்மலங்களும் நீங்கும்படி ஞானானந்தத்தைப் பிரசாதித் தருளுவர்.

*திருச்சிற்றம்பலம்*

7ம் பக்கத் தொடர்ச்சி

அபிஷேகம் என இடம்பெறுவது ஸ்நானம். மூலமூர்த்தி பிருதுவியுடன் தொடர்பான கருங்கல் விக்கிரகம் அல்லது உலோக விக்கிரகம். இவ்விக்கிரகத்தில் அஷ்ட பந்தனம் எனும் மருந்து சாத்தப்படும். அது குங்கிலியம், கொம்பரக்கு, சுக்கான்கல், தேன்மெழுகு நாற்காவி, வெண்ணெய் செம்பஞ்சு, சாதிலிங்கம் ஆகியவற்றை சேர்த்து இடிக்கப்பட்டதாகும். மூர்த்தியை உரிய முறையில் எழுந்தருளச் செய்கிறார்கள். அதற்கு முன் எழுந்தருளச் செய்யப்படும் மூல மூர்த்தியின் கீழ் ஏலவே பூசையில் வைக்கப்பட்டுச் சக்தியேற்றப்பட்ட யந்திரத் தகட்டையும் வைத்துத் தபானஞ் செய்கிறார்கள். இதனால் தெய்வ சாந் நித்தியம் ஏற்படுகிறது. எனவே தான் யந்திரத்தை ஒரு மண்டலத்தை முன்பாகத் தயார் செய்து தினமும் அபிஷேகம் பூசை செய்து அதனை தெய்வ சாந்தி நித்தியம் பெற்றதாக ஆக்குவர்.

கும்பாபிஷேகத்தின் போது இடம்பெறும் யாகதரிசனம், ஓமப்புகையைச் சுவாசித்தல், மந்திர ஒலிகளைக்கேட்டல், மூர்த்திக்கு எண்ணெய் சாத்துதல், அதாவது தைலாப்பியங்கம் எனும் கிரியை முக்கியத்துவம் பெறும் இவை பாவ நிவர்த்தியைத் தரும். பக்தர்கள் ஒவ்வொருவரும் சிவசாரியார் எண்ணெய் சாத்திய பின்பு தாமும் சாத்துவர். இதன் பின் பிம்பசுத்தி முதலிய கிரியைகள் முடிவடைய வேத கோஷங்கள் முழங்கக் கும்பநீரால் மூல மூர்த்திக்கு அபிஷேகம் செய்யப்படும். பின் தசதர்சனம் முதலிய கிரியைகள் இடம்பெறும். இவற்றைத் தொடர்ந்து மகா அபிஷேகம் ஆகியன நிகழும்.

கும்பாபிஷேகம் பற்றி ஆகமங்கள் பல்வேறுபட்ட விளக்கங்களை நமக்குத் தருகின்றன. எனினும் இடம், ஏவல் தகுதி ஆகியவற்றுக்கு ஏற்பவே இவற்றைச் செய்யமுடியும்.

"அவனருளாலே அவன் தாள் வணங்கி என்பது மணிவாசகர் வாக்கு. அவனருள் இருந்தால் தான் எதையும் முட்டின்றி செய்யமுடியும்.

மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுக.

## பெரியோர் பண்பு

உடம்பு நன்று என்றுரையார் ஊதார் விளக்கும்
அடுப்பினுள் தீநந்தக் கொள்ளார் அதனைப்
படக் காயார் தம்மேல் குறித்து

நேரில் பார்த்த ஒருவரிடம் அவர் உடல் நன்றாக இருக்கிறது – என்று, அவர் எதிரிலேயே கூற மாட்டார்கள். எரியும் விளக்கை, வாயால் ஊதி அணைக்க மாட்டார்கள். அடுப்பில் எரியும் நெருப்பை, அடுப்பு அணைய எடுக்க மாட்டார்கள். தீ தம்மேல் படுமாறு அமர்ந்து குளிர்காய மாட்டார்கள், பெரியோர்கள்.

பெற்றால் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தெளிர் வாழும் உலகு. 58

கணவனைப் போற்றிக் கடமையைச் செய்யப்பெற்றால் மகளிர் பெரிய சிறப்பை உடைய மேலுலக வாழ்வைப் பெறுவர்.

# நின்ற சீர் நெடுமாற நாயனார்

- சிவ: சண்முகவடிவேல் -

நெடுமாறனாருடைய புகழ் ஏழுஉலகிலும் நின்று நிலவுவது. அமணர், தடுமாற்றத்தைத் தரும் தவமல்லாத நெறியையே தவம் என்பர். சமணர் தமது உடலை வருத்தும் செயலைச் செய்வர். அவர் தீமை நெறியில் திகைப்பில்லாது ஒழுகுவர். மாறனார் சூழ்ச்சித் திறன் மிக்க அமண வலையில் அகப்பட்டார். அமண் வலையினின்றும் அகல்வதற்கு ஆளுடைய பிள்ளையாருடைய அடிகளை அடைந்தாராதலினால் மாறனாருடைய மறுவற்ற புகழ் உலகு ஏழினும் மலர்ந்தது.

பாண்டிய நாட்டில் பிள்ளையாருடைய அருளால் சைவம் பாரித்தது. மாறனாருடைய செங்கோல் செந்நின்றது. அறநெறி முறை பயின்றது. சிவநெறி காக்கப் பெற்றது. தேவேந்திரனிடம் பெற்றுக் கொண்ட பொன்னாரம் பொலியும் மார்போடு மாறனார் பொலிந்து விளங்கினார்.

பொன்னாரம் பொலி மார்பிடத்துப் போரை விரும்பினார்கள் பகையரசர்கள். வடதேசத்தினின்றும் வந்தார்கள்.

திருநெல்வேலி நிலத்தில் பெரும் போர் மூண்டது. போர்க்களம் எங்கும் சேனைக் கடல் கைவகுத்தது. குதிரைகள் வெள்ளம் போலக் குவிந்தது. சினந்து சீறும் மதயானைகள் போருக்கு விரைந்தன. நால்வகைச் சேனையை அணி வகுத்து போரில் வெற்றித் தம்பத்தை நாட்ட மாறனார் மனமகிழ்ந்தார்.

இரு பக்கத்துச் சேனைகளும் செருவை முயன்றன. எங்கும் யானைகளின் உடல் துண்டங்கள் சிந்தின. குதிரைகளின் உடற் குறைகள் குவிந்தன. வீரர்களின் கரிய தலைகள் களத்தைக் கவர்ந்தன. எங்கிருந்தும் இரத்தம் பொங்கியது. குருதி வெள்ளம் கடல் நீரோடு கலந்தது. முன்பு உக்கிர குமார பாண்டியர் கடல் சுவற வேல் எறிந்தார். அது போல மாறனாரும் வேல் வாங்க எருவை நீர் எங்குமாகியது.

உக்கிர குமாரர் விடுத்தது போல மாறனாரும் வீர விலங்கினை விடுத்து ஒலிப்பதற்கு – வெற்றிக் குதிரைகளின் கனைப்பு மிக்க களிப்பு ஒலி எழுந்தது. படைக்கலம் ஒலியோடு பளிச்சிட்டது. மலை போன்ற யானைகளின் பிளிற்று ஒலி அலை ஓசையை அடக்கியது. பல இடங்களில் பலவும் கூடி எழும் ஒலி எங்கும் மிக்கது. எல்லாவித ஒலியும் சேர்ந்து ஊழிக் கால மேகங்களின் முழக்கு ஒலியை நிகர்த்தது.

படைக்கலம் தீ உமிழும் போர்க்களத்தில் குருதிக் குளத்தில் குளித்துக் கூத்து ஆடுவன பூதங்கள் மாத்திரம் அல்ல. பேய்களும் உரிய காலத்தில் அரிய பணி புரிய உணவு பெற்றன போல உற்சாகம் கொண்டன.

பாண்டியனார் படைகள் முன்னேறிச் சென்றன. வடபுலத்து அரசன் சேனைகள் பின் வாங்கி வந்தன. திக்குத் திசை கெட்டுப் போயின.

பாண்டியனார் வேப்ப மாலையுடன் வெற்றி வாகை மாலையும் அணிந்தார். மங்கையர்க்கரசி யாருடைய சந்தனம் அணிந்த தனங்களில் தோயப்பெற்ற பெருமையினோடு நின்ற சீர் நெடுமாறர் நிலாவினர். இளநாகமும் இளவெண்பிறையும் திகழும் சிவபெருமானுக்குரிய ஏற்ற திருத்தொண்டு ஆற்றினார்.

நெடுமாறர் அளவில்லாத புகழ் அடையப் பெற்றார். அரசாட்சியை அருளாட்சி ஆக்கினார். கடல் சூழ்ந்த உலகத்தில் திருநீற்று ஒளி மிளிரச் செய்தார். சிவநெறி விளங்க அவநெறி விலக்கித் தவநெறி சார்ந்தார். நீண்ட காலம் அரசுரிமை பூண்டார். மாறனாரின் மாட்சிமைகளை எல்லாம் கொஞ்சு தமிழில் நெஞ்சினிக்கச் செஞ்சொற் புனைந்து விஞ்சு பொருள் விளங்கக் கவிபாடுவார். குன்றைவாழ் சேக்கிழார் குடியில் வந்த சேவை காவலர்

"வளவர்பிரான் திருமகளார் மங்கையருக் கரசியார்
களபமணி முலைதிளைக்குந் தடமார்பிற் கவுரியனார்
இளவளவெண் பிறைஅணிந்தார்க் கேற்றதிருத் தொண்டெலாம்
அளவில்புகழ் பெறவிளக்கி அருள்பெருக அரசளித்தார். (8)

சிவபெருமான் திருவருளால் எல்லோராலும் பரவப்படும் சிவலோகத்தைச் சேர்ந்தார். கவுரியனார் அங்கு இன்புற்று இனிது அமர்ந்திருக்கப் பெற்றார். "அரசுரிமை நெடுங்கால மளித்திறைவரருளாலே, பரசுபெருஞ் சிவலோகத் தின்புற்றுப் பணிந்திருந்தார்".

வள்ளுவத்தில் சித்தாந்தம் - 4

# அருளாகிய திருவடி

- சித்தாந்தரத்தினம் க. கணேசலிங்கம் -

திருக்குறளின் கடவுள் வாழ்த்து ஆதி பகவன் என்று இறைவனைக் குறிப்பிட்டுத் தொடங்குகிறது. உலகம் அவனை முதலாக உடையது என்று கூறப்படுகிறது. அடுத்து வரும் பாடல்களில் இறைவனை வணங்க வேண்டும். இறை வழியில் செல்ல வேண்டும் என்ற கருத்துக்கள் தரப்படுகின்றன.

இங்கெல்லம் இறைவனின் தன்மையை அடைமொழியாக வைத்து அவனைக் குறிப்பிடுவதும், அவனின் தாளை வணங்குதல் வேண்டும், அடைதல் வேண்டும் என்று கூறப்படுவதும் சிந்தனைக்குரியது. 'வாலறிவன் நற்றாள்', 'மலர்மிசை ஏகினான் மாணடி', 'வேண்டுதல் வேண்டாமையிலான் அடி'. தனக்குவமையில்லாதான் தாள்', 'அறவாழி அந்தணன் தாள்', 'எண் குணத்தான் தாள்', 'இறைவனடி' ஆகிய தொடர்கள் இறைவன் திருவடியின் பெருமையையும் சிறப்பையும் உணர்த்துவன.

## அகந்தை அழியும்

இறைவன் அல்லது குருவினது திருத்தாளில் விழுந்து வணங்குவதும், பாத பூசை செய்வதும் பல மதங்களில் காணக்கூடியவை. தாளில் தலைமுட்ட விழுந்து வணங்குவது 'நான்', 'எனது' என்னும் தன்முனைப்பும் அகங்காரமும் அழிவதைக் குறிப்பன. தனது திருக்குறள் விரிவுரையில் திரு. வி. க அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்:

"தலையால் தாளை வணங்குதல் செருக்கறுத்தலை அறிவுறுத்துகிறது. தலை நிமிர்வு முனைப்புக் குறி. அதன் வணக்கம் தாழ்மைக்கு அறிகுறி. மேலேயுள்ள தலை கீழேயுள்ள தாளில் விழுவது முனைப்புச் சாய்ந்து விழுந்து ஒடுங்குதலைத் தெரிவிப்பது".

திரு. வி. க. வின் இந்தக் கருத்துப் பின்வரும் திருக்குறளுக்கு விளக்கமாக வந்தது:

"கோளிற் பொறியில் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத் தலை". – *(குறள்.9)*

தாளை வணங்குதலின் பொதுவான இக்கருத்து எல்லா மதத்தினருக்கும் பொருந்துவது. ஆயினும் சைவசமயத்தில் திருவடியும் அதனை வணங்குதலும் ஆழமான கருத்துக்களைக் கொண்டவையாக உள்ளன.

மாணிக்கவாசகர் தன் திருவாசகத்தில் இறைவனின் திருவடிப் பெருமையைப் பலபடப் பேசுகிறார். பின்வரும் அடிகள் இதற்கு ஒரு உதாரணம் :

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகல....."

– *(திருவெம்பாவை.18)*

அண்ணா மலையானின் திருவடித் தாமரையில் தேவர்கள் தம்முடி தோய வணங்குகிறார்கள். அவர்களின் முடியிலுள்ள உயர்மணிகள் ஒளி வீசுபவை. ஆயினும் பெருமானின் திருவடி ஒளியில் அவை வீறு மழுங்கி ஒளியற்றனவாகத் தென்படுகின்றன. எழுகின்ற ஞாயிற்றின் ஒளியால் விண்மீன்கள் ஒளியிழந்து போவதற்கு அதனை உதாரணமாகக் காட்டுகிறார் மணிவாசகர்.

தன் குலச்சிறப்புக் கெடாதவண்ணம் ஒழுகுதலும், குணஞ் சான்றவர்க்கு ஆவன செய்தலும், உயிர்களுக்கு அகிதஞ் செய்யாமலிருப்பதும் செய்கை.

❖❖❖❖❖

உயர்ந்த குடிப்பிறப்பு சிறந்த கல்வி கூர்ந்த விவேகம், வெற்றி மிகுந்த வீரம் இவற்றையுடையவர் அவற்றைத் தாமே எடுத்துரைக்கலாகாது

புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீறு நடை. 59
புகழைக் காக்க விரும்பும் மனைவி இல்லாதவர்க்கு, இகழ்ந்து பேசும் பகைவர்முன் காளைபோல் நடக்கும் பெருமித நடை இல்லை.

விண்ணகத்துத் தேவர்கள் தாம் பெற்ற பேறுகளால் உயர்நிலையடைந்தவர்கள். இதனால் அவர்கள் அகந்தை மிகுந்தவர்களாக உள்ளார்கள். அவர்களின் மணிமுடியும், அதிலிருந்து வரும் ஒளியும் அவர்களின் அகந்தையைப் பிரதிபலிக்கின்றன. இறைவனின் திருவடி ஒளியில் அகந்தை அழிகிறது; தன்முனைப்பு அகலுகிறது.

அகங்காரம், தன்முனைப்பு ஆகிய குணங்களுக்கு அடிப்படை அறியாமையே. அறிவுடையோன் என்றும் நிறைகுடமாகவே இருப்பான். அறிவை விளங்கவிடாமல் மறைத்து அகங்காரம், தன்முனைப்பு ஆகியவற்றைத் தருவது ஆணவம். அது உயிர்களுக்குக் கட்டுப்படுபவைபோல் அமைந்து ஊறு விளைவிப்பது. ஆணவத்தின் பிடி அகல்வதற்கு இறையருள் ஒன்றே துணை. ஆதலால் அவனின் திருவடிகளைப் போற்றுவது அவசியமாகிறது. அங்ஙனம் போற்றவில்லையெனில் அறிவைத்தரும் கல்வியால் பயனில்லை என்று வள்ளுவம் வலியுறுத்துகிறது.

### உறவும் அருளும்

சைவ சமயத்தில் இறைவனின் திருவடி அவனின் அருளைக் குறிப்பது. அவனின் அருளால் மரணபயம் நீங்கும்; மரணமிலாப் பெருவாழ்வு கிடைக்கும். காலனைக் காலால் உதைத்து மார்க்கண்டேயருக்கு அருளிய கதை இதனை விளக்குவது.

முத்தி நிலையில் திருவடியாகிய திருவருளில் தோய்ந்து உயிர்கள் இன்புற்றிருக்கும். இதனை மாணிக்கவாசகர் "செல்வர் சிவபுரத்தின் உள்ளார் திருவடிக்கீழ்" எனக் கூறி விளக்குகிறார். "தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" என்னும் அப்பர் திருவாக்கும் இதனையே குறிக்கிறது. எனவே இறைவன் தாளை வணங்குதல் என்பது அவனின் அருளை வேண்டுதலாகும்.

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள உறவைப் பல வகையாகக் கூறும் வழக்கம் உண்டு. தந்தை – மகன் உறவு, தோழமை உறவு, ஆண்டான் – அடிமை உறவு, குரு – சீடன் உறவு என்று நால்வகை உறவு முறைகளைச்சைவம் கூறுகிறது. அவை முறையே சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், தாசமார்க்கம், சன் மார்க்கம் என்று கூறப்படும். இந்த உறவுமுறைகளில் நின்று இறைவனை அடையலாம்

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்குமென்பது நன்கு விளங்காமையான் நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

❖❖❖❖❖

கடவுள் பத்தியும், நல்லொழுக்கமும் உடைய பிதா மாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.

என்று அருளாளர் காட்டியுள்ளனர். இவை இறைவனை அடையும் வழிகள் (மார்க்கங்கள்) மட்டுமே என்பதனைப் பலர் உணர்வதில்லை.

இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள உறவு ஆண்டான் – அடிமை உறவுதான். பெத்த நிலையிலும் முத்தி நிலையிலும் இறைவன் ஆண்டான், உயிர் அடிமை என்பதே சைவத்தின் கொள்கை. சுந்தரமூர்த்தி நாயனார் "மீளா அடிமை உனக்கே ஆளாய்" என்று கூறி இதனைக் குறிப்பிடுகிறார்.

இறைவனைத் தலைவனாகவும் இறைவியைத் தலைவியாகவும் கொண்டு, இறை – உயிர் உறவை கணவன் – மனைவி உறவாக விளக்குபவரும் உண்டு. இது தவறான விளக்கம். திருநாவுக்கரசுநாயனாரின் "முன்னம் அவனுடைய" என்று தொடங்கும் பாடலை இதற்கு உதாரணமாகச் சிலர் காட்டுகின்றனர். இப்பாடல் ஆன்மாவுக்கு இறைவன் மேலுள்ள ஈடுபாட்டையும், அவனை அடைய வேண்டுமென்ற பேராவலையும் விளக்குகிறது. தன்னைக் கைப்பிடிக்கப் போகும் தலைவன் பற்றிய செய்திகளைக் கேட்டு மகிழ்வதாக அமைந்தது இப்பாடல். ஆயினும் இறுதியடியில் அவள் அவனை மணப்பதாகக் கூறாமல், அவனின் தாளை அடைகிறாள் என்று கூறுகிறார். "தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" என்பது இந்த அடி.

மாணிக்கவாசக சுவாமிகள் தனது திருவெம்பாவையிலே இறையடியார்களாகிய பெண்கள் இறைவனை மணப்பதைக் கூறாமல், அவனின் அடியார்களை மணப்பது பற்றிக் கூறுகிறார்.

"உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார்...." (பாடல்.9)
"எங் கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க"
*– (பாடல் 19)*

**The man whose wife seeks not the praise (of chastity;) cannot walk with lion-like, stately step, before those who revile him. 59**

ஆயினும் மணிவாசகரின் திருக்கோவையார் இறைவனைத் தலைவனாகவும் ஆன்மாவைத் தலைவியாகவும் கொண்டு எழுதப்பட்டுள்ளது. தமிழில் அகத்துறை சார்ந்த நூலாக எழுதப்பட்டது திருக்கோவையார். இலக்கிய வழியில் இறை பக்தியை ஊட்டுவது இந்நூல். இது போன்ற பாடல்களை ஞானசம்பந்தப் பெருமானும் பாடியுள்ளார். "சிறையாரும் மடக்கிளியே" என்று தொடங்கும் பாடல் போன்றவை அவரால் பாடப்பெற்ற அகத்துறை இலக்கியத்தைச் சார்ந்தவை. இவற்றைக் கொண்டு இறை உயிர் உறவைக் கணவன் – மனைவி உறவாகக் கொள்வது தவறானது. சைவம் கூறும் சற்புத்திர மார்க்கம் போன்ற வழிகளில் இது கூறப்படவில்லை.

கணவன் – மனைவி உறவு வைணவத்தில் வருவது. அவன் கோபாலன், ஆன்மாக்கள் கோபியர்கள் என்பது வைணவக் கொள்கை. முத்தி நிலையில் அனந்த கல்யாண குணங்கள் கொண்ட திருமாலின் சந்நிதியில் கணவன் முன் மனைவி இருந்து மகிழ்வதுபோல் ஆன்மா மகிழ்ந்திருக்கும். இத்தகைய கொள்கை சைவத்துக்கு வேறானது. *சிவத்தை மணத்தல் சைவத்தில் இல்லை.* திருவள்ளுவர் தன் பாடல்களிலே இறைவன் திருவடியைத் தொழுதல் பற்றி எழுதியிருப்பதும் இதனை உணர்த்துவதாக உள்ளது.

## பிறவி நீங்க வழி

உயிரும் ஒரு விதத்தில் பரம்பொருளைப் போன்றதுதான். பரம்பொருள் அறிவு வடிவான சித்துப்பொருள். (சித் – அறிவு, ஞானம்). உயிரும் சித்துப்பொருள். அத்துடன் இச்சை, செயல் (கிரியை) ஆகியவையும் உயிரின் தன்மைகள். சைவசித்தாந்த வழக்கில் "இச்சா ஞானக் கிரியா சொரூபி" என்று ஆன்மாவை அழைப்பதுண்டு. இறையருளினாற்றான் ஆன்மாவின் இச்சையும், ஞானமும், கிரியையும் எழுப்பப்படுகின்றன. ஆகையால் சித்துப்பொருளாகிய இறைவனின் திருவருளைப் பெறுதல் அவசியமாகிறது. இந்தச் சித்தாந்த விளக்கத்துக்கு அமைவதாக இரண்டாவது குறளில் வாலறிவன் தாள் தொழுவது கூறப்படுகிறது.

நல்வினை, தீவினை இரண்டும் மனிதனுக்குக் கட்டாக அமைவது. ஒன்று பொன் விலங்கு போலவும் மற்றது இரும்பு விலங்கு போலவும் இருக்கின்றன. உலக வாழ்வில் வினை அல்லது செயல் செய்வது இயல்பாகவும் தேவையாகவும் இருக்கிறது. வினைப் பலனைச் செய்தவனே அனுபவிக்க வேண்டுமென்பது நியதி. அது அனுபவத்திற்கு வருவதற்கு மீண்டும் வினை செய்ய வேண்டியுள்ளது. அதற்கு உடலும் உலகப் பொருட்களும் தேவைப்படுகின்றன. மாயையின் காரியமானவை இவைகள். முன் செய்த வினை பலனுக்கு வருவதற்கு உடலோடு கூடிய பிறவி எடுத்து, அதில் புதிய வினை செய்யப்படுகிறது. இதனால் இன்ப, துன்ப அனுபவங்கள் கிடைக்கின்றன. இவற்றின் மூலம் அறிவு விளங்குகிறது. ஆணவத்தின் பிடி ஓரளவு குறைகிறது. ஆயினும் புதிதாகச் செய்த வினையின் பலன் அனுபவத்திற்கு வருவதற்கு மீண்டும் பிறவி எடுக்க வேண்டியுள்ளது. இங்ஙனமே வினையினால் பிறவியும், பிறவியினால் வினையும் என்று பிறவிகள் சங்கிலித் தொடர்போல் மாறி மாறி வருகின்றன. இதனைப் பிறவிப் பெருங்கடல் என்று திருக்குறள் கூறுகின்றது. பின்னால் வந்த சமய இலக்கிய நூல்களும் பிறவிக் கடல் என்று கூறுகின்றன. இப்பிறவிக் கடலை நீந்திக் கரையை அடைவதற்கு இறையருள் ஒன்றே துணைபுரியும். இறையருள் பெறாதவர்களால் பிறவிக் கடலை நீந்த முடியாது. அவர்கள் இன்ப, துன்பச் சுழற்சியிலே சிக்கித் தடுமாறுவார்கள். இது சைவ சமயக் கருத்து. இதனை கடவுள் வாழ்த்தின் இறுதிப் பாட்டு விளக்குகிறது.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதவர்". *(குறள்–10)*

இறையருளை இரண்டு வழிகளில் பெறலாம். அறிவின் வழி ஒன்று; அன்பின் வழி இன்னொன்று. அறிவினால் அவனின் பெருமையையும் பேரருளையும் உணர்ந்த போது, அவன் எமக்கு அன்னியம் இல்லாதவன், எம்முடன் இருந்து எமக்கு உதவுபவன் என்ற உறுதியான எண்ணம் உண்டாகிறது. அப்பொழுது அவனின் திருவடியை நோக்கி ஆன்மா செல்லும். இறைவன்மேல் இடையறாத அன்பு மலரும் போது பக்தி வளரும். அவன் "பக்திவலையில் படுபவன்". அப்பொழுதும் ஆன்மா அவனின் திருவடிக்குச் செல்லும். இந்த இரு வழிகளிலும் திருவருளைப் பெறுவதை சைவ சித்தாந்த முதன்மை நூலாகிய சிவஞானபோதம் பின்வருமாறு விளக்குகிறது.

*"அன்னியம் இன்மையின் அரன் கழல் செலுமே"*
*அயரா அன்பினில் "அரன்கழல் செலுமே".*

இந்த இருவழிக்கும் உடந்தையான அறிவையும் அன்பையும் வள்ளுவம் பலவாறாகப் போற்றுகிறது.

மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. 60
மனைவின நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்று கூறுவர்; நல்ல.
மக்களைப் பெறுதலே அதற்கு நல்ல அணிகலம் என்றும் கூறுவர்.

# மனத்துள் வைத்த திருப்பதிகம்

- முருகவே பரமநாதன் -

"தாவாரம் இல்லைத்
தனக்கொருவீடில்லை
தேவாரம் ஏதுக்கடி – குதம்பாய்
தேவாரம் ஏதுக்கடி"

வாரம் – பங்கு, வீடு –விடுதலை குதம்பைச்சித்தர்

"வேதநெறி தழைத்தோங்கவும் சைவம் ஓங்கவும்" வழிசமைத்த திருஞானசம்பந்தரின் பாடல்களைத் திருக்கடைக்காப்பென்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடல்களைத் திருப்பாடல்கள் என்றும் அழைத்த நமது முன்னோர் அப்பர் பெருமானின் பாடல்களை மட்டுமே "தேவாரம்" என்று அழைத்து மகிழ்ந்தனர். இன்று பொதுவாக மூவர் முதலிகளின் பாடல்கள் அனைத்தையுமே தேவாரம் என்று குறிப்பிட்டாலும் திருநாவுக்கரசரின் தெய்வப் பாடல்களுக்கே 'தேவாரம்' என்ற பெயர் சிறப்பாகப் பொருந்தும்.

முற்காலத்தில் மக்கள் தங்கள் மன அமைதிக்காகவும், ஆன்ம இலயிற்பிற்காகவும் சிறப்பாகத் தெய்வத் திருமேனிகளை அமைத்துக் கொண்டு வழிபட்டுப் போற்றி வந்தனர். அந்தத் தெய்வத் திருமேனிகளைத் 'தேவாரம்' என்று அழைத்தனர். அப்படிப் போற்றி வழிபட அவர்களுக்கு மனத்தை நெகிழவைக்கும் பாடல்கள் தேவைப்பட்டன. அதற்கு வாகீசப் பெருமானின் பாடல்களே ஊனை ஊருக்கி உள்ளொளி பெருக்குவதாக அமைந்தன. 'தேவாரத்' திருமேனிகளை வழிபட உதவிய பாடல்களையும் 'தேவாரம்' என்றே அழைத்து மகிழ்ந்தனர்.

'அருள்மொழி அரசி' வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன். திருமுறைக்கதைகள் 1999 வாக்கின் வேந்தராம், மருணீக்கியாரின் பாவினங்கள் புதுமையானவை; புனிதமானவை. படிப்போரைப் பரசவப்படுத்துபவை. திருத்தாண்டகம், திருவிருத்தம், திருநேரிசை, திருக்குறுந்தொகை என்பன அவை. பொதுமையாய்ப் பதிகமென வழங்கப்படினும் பொருண்மையாற் சிறப்பாகவும் பெயர் கொண்டன. ஒய்வாய் இருக்கும் பொழுதுகள், பழுதாகாமல் பயன்பட வேண்டின் அப்பர் அருளியவைகளைப் படிப்பின் பயனடையலாம். பாவநாசக் குறுந்தொகை மறக்கிற்பனே என்னும் குறுந்தொகை, பசுபதித் திருவிருத்தம், காலபாசக்குறுந்தொகை, சரக்கறைத்திருவிருத்தம் என்பன போன்ற பலபதிகங்கள், வெவ்வேறு, கண்ணோட்டத்திலும், கருத்தோட்டத்திலும் அமைந்துள்ளன. இவ்வண்ணமே 'என்மனத்தே வைத்தேனே' எனமுடிவுறும் தேவாரங்கள் மனத்துள் வைத்த திருப்பதிகம் என வழங்கப்படுகிறது. பாட்டுக்குப் பாவேந்தராய்த்திகழும் நாவேந்தரின் நயமிகு பாசுரங்கள், படிப்பவரைச் சிவமயமாம் இறைமயமாக்கும் பாவம் அவரது தனித்துவமான விழுமியம் எனலாம்.

"இரவாடும் பெருமானை என்மனத்தேவைத்தேனே
ஏனோர்க்கும் பெருமானை என்மனத்தே வைத்தேனே
எப்போதும் இனியானை என் மனத்தே வைத்தேனே
இண்டைசேர் சடையானை என்மனத்தே வைத்தேனே
ஏறேறும் பெருமானை என்மனத்தே வைத்தேனே
ஈசனை எம்மானை என்மனத்தே வைத்தேனே
இல்லானை எம்மானை என்மனத்தே வைத்தேனே
எரித்தானை எம்மானை என்மனத்தே வைத்தேனே
ஏகம்ப மேயானை என் மனத்தே வைத்தேனே
........................................................................ கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை என்மனத்தே வைத்தேனே"

என்னும் பக்திமயமான பதிவுகளை மீண்டும் மீண்டும் அழுத்துவதனால் இறை ஈடுபாடும், உள்ளுணர்வும், வேகமும் விறுவிறுப்பும், வேண்டுதலும், நினைவும்,

*தலைமயிர், முகம், பல், கழுத்து, மார்பு இவை யழகினும் உள்ளத்தூய்மையே மேலான அழகாகும்.*

❖❖❖❖❖

*அறமுள்ளவனுக்கு அருள் விளையும்; அருள் உள்ளவன் பழியையுந் தீவினையையும் புறங் கூறுதலையுஞ் செய்ய மாட்டான்.*

**The excellence of a wife is the,good of her husband : and good children are the jewels of that goodness.** 60

நிலைப்பும் எம்மோடு பதிந்து விடுகின்றன. நினைத்தற் கரியவனை, நினைவையும் கடந்தவனை திரும்பத்திரும்ப நினைந்து, நிம்மதியும், விடுதலையும் சேர அனுபவிக்கிறோம் நாம் எனின் இப்படி எண்பத் தோராண்டாக இறைசகவாசம் கொண்ட வாகீசப் பெருந்தகை எப்பேர்க் கொத்தவர். "மனத்தகத்தான் தலைமேலான் வாக்கிலுள்ளான் வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர் இனத்தகத்தான்". என்றாரே – நாமும் அவன் புகழ் பாடி அவனருள் பெற வேண்டாமா?

சைவ நெறிப் பிறழ்வுகளும், சைவம் சார் கலாசாரமேம்படுகளும், பண்பியலும், பல ஊடுருவல்களால் மாற்றமும் மறுதலிப்பும் நிறைந்த கடந்த சதாப்தம் பல இக்கட்டுகளைத் தாண்டி முன்னேறினும், மிலேனியப் பிறப்பின் நூற்றாண்டு, சாவல்களைத் தரவும் கூடலாம். எனினும் நம் கருவூலங்களான தேவார திருவாசக நினைவும் நனைவும் வரண்டு வற்றிப் போகாமற் பேணப் பல நாவலர்கள் வேண்டும் போற்தெரிகிறது. எனவே அவரின் வழிப்படுத்துகையின் அடிச்சுவட்டில் நடந்து நம்மையும், நம் சைவ உடைமைகளையும் நலிவு வராமற் பேணிப் பாதுகாக்க நாம் மடிதற்று – நம் கடமைகளை முன்னெடுத்துச் செல்லல் நம்பாரிய பொறுப்பாகும். விஞ்ஞான வெளியில் தவழும் ஊடகங்கள் பல தொலை தொடர்பு சாதனங்கள், வலைப்பின்னல்கள், இணையங்கள் போன்றபன் நோக்கு இலக்குகளின் வழி சைவப் பதிவுகள் சர்வதேசமட்டத்தில் இன்றியமையாதனவாகும். இக்கண்ணோட்டத்தில் மிகச்சிறந்த ஊடகங் களிலொன்று தரமான பெறுமானம் உள்ள சஞ்சிகைகள் எனலாம். இப்பார்வையிற் சைவ நீதியின் பங்களிப்பு எவரெஸ்ட் தான் இச்சேவையிற் சைவ மக்களின் பங்களிப்பும் வேண்டப்படுவதொன்றாகும். இயந்திரமயமான வாழ்வியலின் நடுவே, கோயில் மட்டும் நம் மையம் அன்று கோயில்களின் வணிக நோக்கும் போக்கும் வெறுப்பை அள்ளி வீசாமல். நல்வழிப்பாட்டையும் நல்வழிப்படுத்தலையும், சமயப் பிறழ்வின் வழி மக்கள் போகாமல் வழிநிறுத்தவும் முயற்சிகள் எடுக்கவும் வேண்டிய கட்டம் இம்மிலேனியம். எனவே திருமுறைகளை இளசுகளுக்கு அறிமுகம் செய்யும் வழியில் இயங்கும் சைவநீதியின் நோக்கில் திருநாவுக்கரசர் பெருமானின் திவ்விய சிந்தனைகளின் பிரார்த்தனை வடிவான மனத்துள் வைத்திருக்கும் பதிகம் பற்றிய சிந்தனைகளை மனதிற் கொள்வோமாக இப்பதிகத்தின் முதலாவது பாடலிலே என்ன பேசப்படுகின்றது.

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே

கள்ளம் (கரவு), வஞ்சகம் நிறைந்த மனம் உடையவர்கள் காணமாட்டாதவனை தெளிந்த பரிசுத்தமான உள்ளங்களிலே தானே விரைந்து வந்து அமர்கின்ற பெருமானை, இடப வாகனமூரும் சதுரப் பாடுடையவனை, பாம்புகள் படமெடுத்தாட, சடை தாங்கிய பெருமானைக், கையிலே நெருப்பைத் தாங்கி நடுசியில் நட்டம் பயிலவல்லானை என் மனத் தேவைத்தேனே என்று கூறும் அப்பர் அடிகள் தன் மனத்தே வைப்பதோடு நின்றுவிடவில்லை. இப்படியான பெருந்தன்மையினை நீவிரெல்லீரும் உங்கள் மனத்திற் பதித்துக் கொள்ளவும் தவறாதீர்கள் என்றும் இடித்துரைக்கின்றார். அதற்கு உங்கள் மனதை வெண்மையாக்குங்கள். நயவஞ்சத்தை. கரவு மனத்தை விட்டு, புனித மனத்தராய் வாழுங்கள் என்கிறார். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் கரவு நெஞ்சர். எனவே திரிகரண சுத்தியை வளர்த்தல் நம் கடன். ஏனெனில் சொல்லையொத்துச் செயல் மனமும் தூயவர்க்கே தோற்றம் தருவான் இறைவன். அவன்வானோர்க்கு மட்டுமன்றி ஏனோர்க்கும் தலைவன். தேன் போன்ற கிளி மொழியாளாம் உமையவளைப் பாகமாக உடையவனை, தழலுருவான செம்பவள மன்ன திருமேனியை உடையவனை, சங்கரனை என்மனத்தே வைத்தேனே எனப் பேசும் அடுத்த பாடல் இதோ.

தேனோக்குங்கிளிமழலை உமை கேள்வன் செழும்பவளம்
தானோக்குந் திருமேனி தழலுருவாஞ் சங்கரனை
வானோக்கும் வளர்மதிசேர் சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை என்மனத்தே வைத்தேனே"

இனிவருவது எல்லோர் நாவிலும் தவழும் பாடல் கைகள் நிறைய மலர்களை அள்ளிச் சொரிந்து, அன்பு பொழிய வானவர்கள், காலை, நண்பகல், மாலையென்னும் மூன்று வேளைகளிலும், கரம்கூப்பி, சிரம்தாழ்த்தி வழிபாடு செய்கின்ற தலைவனை, அடியேனு மவ்வண்ணமே மலர்களைத்தூவி, மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்புலன்களையும், உள்ளே அடக்கி, ஐம்புலனை வென்று, எக்காலத்தும்

இனியவனாகிய எம்பெருமானை நிலையாக நிறுத்தினேனே.

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

புலனைந்தும் வென்றான் தன்வீரமே வீரம் என்பது அவ்வை வாக்கு. குதிரையை அடக்குவது போல் மனதை அடக்குவதும், துறட்டியால் யானையை அடக்குவது போல அறிவெனும் அங்குசத்தால் ஐம்புலனையடக்கி மனதை நன்னெறிப் படுத்துவதும் நம் வேலை. புலனைவென்ற திருநீலகண்டர் நமக்கோர் இலட்சிய மகானன்றோ. இறைவனைப் பூமாலை பூட்டித் தொழுவர் சிலர். பாமாலை சாத்திப் பணிவர் சிலர். அவ்வருளாளர்களின் கவியாரம் போற்றிப்பரவி மகிழ்வர் பலர் இப்படியான இறைவனோ அண்டமாய், எல்லாவற்றுக்கும் ஆதிப்பரம் பொருளாய்த் திகழ்கின்றான். இவ்வண்ணம் அண்டமாயும், பிண்டமாயும் திகழும் எம் பெருமானை என்மனத் தேவைத்தேனே என்கின்றார் வாக்கின் செல்வர்.

அண்டமாய் ஆதியாய் அருமறையோ டைம்பூதப்
பிண்டமாய் உலகுக்கோர் பெய் பொருளாம் பிஞ்ஞகனைத்
தொண்டர் தாம் மலர் தூவிச் சொல்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை என்மனத்தே வைத்தேனே.

இண்டை–தலைமாலை

எம்பெருமானின் திருமுடியிற் கங்கை ஏறியிருக்கிறது. கழுகுகள் விரும்பும் கபாலம் – பிட்சா பாத்திரம் – திருக்கரங்களில் ஏறியிருக்கிறது. திருநீறு உடலெங்கும் ஏறிப்பிரகாசிக்கிறது. ஓர் நாமம் இல்லாற்கு ஆயிரம் திரு நாமங்கள் ஏறியிருக்கிறது. அவன் ஏறுவதும் ஏறு – இடபவாகனம். இப்படியான எம் பெருமானை என்மனத்தே வைத்தேனே என்னும் அடுத்த பாடல் நம்மைத் தட்டியெழுப்புகிறது.

ஆறேறு சடையானை ஆயிரம்பே ரம்மானைப்
பாறேறு படுதலையிற் பலி கொள்ளும் பரம்பரனை
நீ ரேறு திருமேனி நின்மலனை நெடுந்தூவி
ஏரேறும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

பாறு – கழுகு, கருடன், ஆறு – கங்கை நெடுந்தூவி பெரியதிமில்; திமில் – எருத்தின் ஏரி, ஏறு – இடபம். ஒளிமயமான தேசஸ்நிறைந்தவனை. உலகம் போற்றும் திருமாலின் பூசனையை ஏற்றவனை பூவின் மணமானவனை; பஞ்சபூதங்களாய் நிற்பவனை இறைவனை என்மனத்தே வைத்தேனே

தேசனைத் தேசங்கள் தொழநின்ற திருமாலால்
பூசனைப் பூசனைகள் உகப்பானைபூவின்கண்
வாசனை மலைநிலநீர் தீவளிஆ காசமாம்
ஈசனை எம்மானை என்மனத்தே வைத்தேனே

இவ்வரிசையிற் சுவாமிகள் தரும் பாடல்கள் நம்மைத் தட்டியெழுப்பி, தலைநிமிர்ந்து நடக்க வைக்கின்றன. அருள்வாக்கி அரசர் பெருமானின் மொழிவடிவழியும். கவிதை பொழியும் வண்ணம், எழில் கொஞ்சும் பொழிலன்ன சொல்வண்ணம். சுவை வண்ணம், சுருதி வண்ணம் போற் படிப்பவர்க்குப் பயன்தருவனவாம். மேலும் சுவாமிகள் கவிதை வடிவிலே எம்மோடு எக்காலமும் பேசிக் கொண்டிருக்கும் வண்ணங் களெங்கும் இனிக்கும் தமிழ் வண்ணங்களே. எண்ணியெண்ணித்திட்டம் போட்டு எழுதினவையல்ல இவை. எண்ணாமல் எங்கிருந்தோ கொட்டி யவையுமன்று. நாம் செய்த புண்ணியம் தான் என்னே, யென்னேயென வியக்கும் வண்ணம் வழங்கப்பட்ட சொல்வண்ணங்களே இவை. சொல்லாய்ச் சொல்லின் பொருளானவனைத்துதிக்கும் பாணி மிகுஇலா வண்ணியமானவை

நல்லானை நல்லான நான் மறையோ டாறங்கம்
வல்லானை வல்லார்கள் மனத்துறையும் மைந்தனைச்
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத் துகளேதும்
இல்லானை எம்மானை என்மனத்தே வைத்தேனே

துகள் – குற்றம்

பத்து அவதாரம் எடுத்த அரியும், அவன் மைந்தனெனப் பேசப்படும் அயனும் அறிய முடியாதவனை, ஒருபாகம் பொண்ணாகவும், மறுபாதி ஆணாகவும் அமைந்த அர்த்த நாரீசுவரனை, பசுபதியை (ஆன்மாக்களின் தலைவன் பசு + பதி) உரத்தசுரத்தில் வேதங்களையோதும் இறையானை, மறையானை – நீண்ட மதில்கள் நிறைந்த காஞ்சிவாழ்கச்சியேகம்பனை என்மனத்தே வைத்தேனே என்னும் கருத்துக்களை எம் நெஞ்சில் அழுத்துவோம்.

நாம் – நிதம்

ஆகம்பத் தரவணையான் அயன் அறிதற் கரியானைப்
பாகம்பெண் ணாண்பாக மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோதும் இறையானை மதிற்கச்சி
ஏகம்ப மேயானை என்மனத்தே வைத்தேனே

ஆகம்பத்து அரவு அணையான் – பத்து அவதாரங்களைக் கொண்டபாம் பணையான் திருமால், மாகம்ப – உரத்தசுரத்தில் ஓதப்பட்ட, மறை – வேதம், பசு – ஆன்மா, பதி – தலைவன்

# சைவ நெறி பாடமும் பயிற்சியும்

## திருக் கோயில் வழிபாடு

"சாந்தையூரான்"

### இறைவன்

எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்து நிற்பவன் இறைவன

உருவம் அருவம் அருவுருவம்

கொண்டவர் இறைவன்

இறைசக்தியை உள்ளத்தில் பதிய உருவாக்கப்பட்டது உருவங்கள் (விக்கிரம்) ஆகும்.

பிள்ளையார் சிவலிங்கம் அம்பாள் முருகன் விஷ்ணு துர்க்கை

சிவனே உறைந்து நிற்கிறான்

கடவுள் பக்தியை வளர்க்க கோயில் உதவும்

சைவசமயம்

பிரமாணநூல்கள்

வேதங்கள் | சிவாகமங்கள் | பன்னிரு திருமுறைகள் | பதின்னான்கு சித்தாந்த சாஸ்திரங்கள்

இந்நூல்களில் கோயில் அமைத்தல், உருவ பிரதிட்டை, பூசைக்கிரியை, வழிபாட்டு முறைகள் பற்றிய சிவாகம விதிகள் தரப்பட்டுள்ளன.

கோயில்

அன்பு, அமைதி, தெய்வீகம், சாந்தம், தூய்மை நிறைந்துள்ள இடமாகும்.

ஆன்மா லயப்படும் இடம் ஆலயம் ஆகும்.

பூசை ஆராதனைகள் மூலமும் மந்திர ஒலி, கிரியைகள், மணியோசை, வாத்திய ஒலிகள் வழிபடுவோரில் பக்தியை ஏற்படுத்துகின்றன.

சமய வாழ்க்கை விழுமியங்கள் அறியவும், வாழ்வினை நன்நெறியில்செலுத்தவும் புராணபடனம், திருமுறைகள் முற்றோதல், சமயச் சொற் பொழிவுகள், கதாப்பிரசங்கள், சமயம் சார்ந்த கலை நிகழ்ச்சிகள் வழி வகுக்கின்றன.

நமஸ்கார முறை

ஆண்கள் — அட்டாங்க நமஸ்காரம்

பெண்கள் — பஞ்சாங்க நமஸ்காரம்

வழிபடும் முறை

இறை நாமத்தை தியானித்த படி இருகைகளையும் சிரசிலேனும் நெஞ்சிலேனும் குவித்த வண்ணம் இறை நாமங்களை சொல்லி பஞ்சாட்சர மந்திரத்தை செபித்துவலம் வருதல் வேண்டும்.

நமஸ்காரம் பிரதட்சனம்

செய்தபின்

துவாரபாலகரை வணங்கி

அதன் பின்

திருநந்தி தேவரை தரிசனம் செய்து சிவபெருமானை தரிசித்து உள்ளே செல்ல அனுமதி பெற வேண்டும்.

வணங்கும் முறை

முதலில் விநாயகரை முறைப்படி வணங்க | சிவபெருமானை வணங்குதல் | அதன் பின்

உமாதேவி, சபாபதி, தட்சிணா மூர்த்தி, சோமஸ்கந்தர் சந்திரசேகரர், சும்பிரமணியர் வைரவர் ஆகிய மூர்த்திகளை வணங்க வேண்டும்.

இரண்டு கைகளையும் சிரசிலோ, மார்பிலோ குவித்து தோத்திரம் செய்தல் வேண்டும்.

சிவாச்சாரியரைக் கொண்டு பழம்முதலிய பூசைப் பொருட்களை நிவேதித்து அர்ச்சனை செய்து விபூதி,

பிரசாதங்களை பெற்றுத் தரித்து கொள்ளுதல் வேண்டும்.

↓

இறுதியில்

↓

சண்டேசுவரை கைகொட்டி சிவதரிசன பயனைத் தரும்படி கேட்டு பிரார்த்திக்க வேண்டும்.

↓

இதன் பின்

↓

பின்னர் பலிபீடத்துக்கு அப்பால் நமஸ்காரம் செய்துபின்சிவதியானம் செய்தல் வேண்டும் அதன் பின்னர் வீட்டுக்கு செல்லுதல் வேண்டும்.

**பயிற்சி**

**1. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக,**

1. திருவுருவத்தை வணங்குவதற்கான காரணம் யாது?
   ..........................................................
2. திருக்கோயில் வழிபாடு இன்றியமையாததென கூறும் நூல்கள் எவை?
   ..........................................................
3. கோயில்களில் நிறைந்துள்ளவை எவை?
   ..........................................................
4. ஆலய வழிபாடு மூலம் ஏற்படக் கூடியது யாது?
   ..........................................................
5. ஆலயங்களினால் வளர்க்கப்படும் பண்பு யாது?
   ..........................................................
6. இறைவனை ஒருமனப்பட்டு வழிபடத் தூண்டு பவை எவை?
   ..........................................................
7. திருக் கோயில்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள் யாவை?
   ..........................................................
8. ஆலயத்திற்கு செல்லும் போது எவ்வாறு செல்ல வேண்டும்?
   ..........................................................
9. ஆலயத்திற்கு கொண்டு செல்லத்தக்க பொருட்கள் எவை?
   ..........................................................
10. எத்தகைய நிலைமைகளில் கோயிலுக்கு செல்லக் கூடாது?
    ..........................................................
11. ஆண்கள் செய்யக் கூடிய நமஸ்காரம் யாது?
    ..........................................................
12. பெண்கள் செய்யக் கூடிய நமஸ்காரம் யாது?
    ..........................................................
13. நமஸ்காரம் செய்யும் முறைகள் எவை?
    ..........................................................
14. ஆலய வழிபாட்டால் ஏற்பட கூடியன யாது?
    ..........................................................
15. சண்டேசுவரை எவ்வாறு வணங்க வேண்டும்?
    ..........................................................

**II. கீழ்க்காணும் "அ" பகுதி விளக்கி நிற்கும் பொருள் தரக்கூடிய சொற்களுடன் இணைக் குக.**

| | |
|---|---|
| 1. இறைவனை பல வடிவங்களில் வழிபடும் முறை | சிவாகமங்களின்விதி |
| 2. திருவுருவங்களை பிரதிட்டை செய்தல் பூசை, வழிபாட்டு முறை களை விளக்குவன. | பழவினைகள் |
| 3. மனம், மொழி, மெய்யினால் வழி படுவதனால் நீங்குவது | திருவுருவ வழிபாடு |
| 4. ஆலயத்தை கூட்டுதல், மெழு குதல், கழுவுதல், பூமாலை கட்டுதல், துப்பரவு செய்தல் ஆகியன. | பஞ்சாங்க நமஸ்காரம் |
| 5. ஆண்கள் வழிபடும் முறை | விநாயகர் |
| 6. முதலில் அடைய வேண்டிய சந்நிதி | சரியைத் தொண்டு |
| 7. பெண்களின் வழிபாட்டுமுறை | சண்டேசுவரர் |
| 8. இறுதியில் வழிபடப்படுபவர் | அட்டாங்க நமஸ்காரம் |

**III. கீழ்க்காணும் இடைவெளிக்கு சொற்களை வைத்து வாக்கியங்களை பூர்த்தி செய்க.**

1. இறைவனை பல ........................ வழிப்பாட்டாலும் சிவனே எல்லா உருவங்கனிலும் உறைகின்றார்.
2. சிவாகமங்களில் ........................ கூறப்பட்டுள்ளது.
3. திருக்கோயில் பூசைகள் மனதை ........................ வழிபாடு செய்யத் தூண்டுகிறது.
4. சமய அறிவை வளர்த்து கொள்ள ........................ உதவுகின்றன.
5. திருக் கோவில்களில் ........................ சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும்.

6. யாவர்க்குமாம் இறைவர்க்கொரு.................. எனத் திருமந்திரம் கூறுகின்றது.
7. இறுதியில் சண்டேசுவரர் ................ சிவதரிசன பயனை அடைய வேண்டும்.

## விடைகள்

1. இறைசக்தியை உள்ளத்தில் பதியவைக்க
2. வேதங்கள், சிவாகமங்கள் பன்னிருதிருமுறைகள், பதின்னான்கு் சாஸ்திரங்கள்
3. அன்பு, அமைதி, தெங்வீகம், சாந்தம் தூய்மை
4. ஆன்மா லயப்படும்
5. அன்பு, அமைதி, தெய்வீகப் பண்புகள்
6. விக்கிரகங்கள்
7. புராணபடனம், திருமுறைகள் முற்றோதல் சமயக் சொற்பொழிவு, கதாய்பிரசங்கள்
8. இறைவனை தியானித்தபடி செல்ல வேண்டும்.
9. பூ, பழம், பூசைப் பொருட்கள்
10. இழுக்கு, தீட்டு, மரணவீட்டுக்கு சென்றபின்
11. அட்டாங்க நமஸ்காரத்
12. பஞ்சாங்க நதஸ்காரம்
13. அங்கங்கள் நிலத்தில் படசெய்வது
14. மனத்தூய்மையும், லயப்படுதலும்
15. கை கொட்டடி சிவதரிசனப் பயனை தருமாறு வேண்ட வேண்டும்.

## நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| புரட்டாதி | 01 | 17.09.2000 | ஞாயிறு | மாதப்பிறப்பு, ஷடசீதி புண்ணியகாலம் காலை 8.48 வரை, சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| | 02 | 18.09.2000 | திங்கள் | மஹா பரணி கார்த்திகை விரதம் |
| | 03 | 19.09.2000 | செவ்வாய் | திருநாளைப்போவார் குருபூசை |
| | 05 | 21.09.2000 | வியாழன் | மத்தியாஷ்டமி |
| | 07 | 23.09.2000 | சனி | புரட்டாதிச் சனி |
| | 08 | 24.09.2000 | ஞாயிறு | எகாதசி விரதம் |
| | 09 | 25.09.2000 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| | 10 | 26.09.2000 | செவ்வாய் | அருணந்தி சிவாசாரியார் குருபூஜை |
| | 11 | 27.09.2000 | புதன் | அமாவாசை விரதம், மஹாளயபக்ஷ முடிவு |
| | 12 | 28.09.2000 | வியாழன் | நவராத்திரி விரதாரம்பம் |
| | 14 | 30.09.2000 | சனி | புரட்டாதிச் சனி |
| | 15 | 01.10.2000 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| | 17 | 03.10.2000 | செவ்வாய் | ஷஷ்டி விரதம் |
| | 18 | 04.10.2000 | புதன் | சரஸ்வதி பூஜாரம்பம் |
| | 20 | 06.10.2000 | வெள்ளி | மஹா நவமி விரதம், சரஸ்வதி பூஜை, ஏனாதி நாதர் குரு பூஜை. |
| | 21 | 07.10.2000 | சனி | விஜயதசமி ஸமீவிருஷ பூஜை, புரட்டாதிச்சனி கேதாரகௌரி விரதாரம்பம் |
| | 23 | 09.10.2000 | திங்கள் | ஏகாதசி விரதம் |
| | 24 | 10.10.2000 | செவ்வாய் | பிரதோஷ விரதம், நரைசிங்க முனையரையர் குருபூசை |
| | 25 | 11.10.2000 | புதன் | கடையிற் சுவாமி குருபூஜை |
| | 26 | 12.10.2000 | வியாழன் | நடேசரபிஷேகம் |
| | 27 | 13.10.2000 | வெள்ளி | பூரணை விரதம் |
| | 28 | 14.10.2000 | சனி | உருத்திர பசுபதியார் குருபூசை, புரட்டாதிச் சனி |
| | 30 | 16.10.2000 | திங்கள் | சங்கடஹர சதுர்த்தி விரதம், கார்த்திகை விரதம் |









Regd. No. QD/22/News 2000 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் 48B புளூமெண்டோல் வீதி, கொழும்பு 13
என்னும் முகவரியிலுள்ள யுனி ஆர்ட்ஸ் இல் அச்சிட்டு 2000-08-14 இல் வெளியிடப்பட்டது